நவீன பூகோள சாஸ்திரம்

இராமநாதபுரம் ஜில்லா

(சரித்திரம், துரைத்தனம் சேர்க்கப்பட்டளே)

3625
915.4824
OFFICE OF THE REGISTRAR
12 DEC 1930
MADRAS

K. M. வீராச்சாமி பிள்ளை
இயற்றியது

(1661)

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
மதராஸ் & மதுரை

ரிஜிஸ்தர் செய்தது] 1930 [விலை அணா 4½

U.21196
N30

Printed at the
Vivekananda Press
Madura 1930

முகவுரை

இப்புத்தகம் தற்கால போதனு முறைப்படி மாணவர்கள் சுலபமாக கற்றுக்கொள்ளத்தக்க எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் பிளான் வரையும் விதத்தைக்காட்டியுள்ளபடி மாணவர்களுக்கு உபாத்தியாயர் கற்றுக்கொடுத்தால் மாணவர்கள் எளிதில் அறிந்துகொள்வார்களென்பதில் ஐயமில்லை.

உபாத்தியாயர்கள் முதலில் மாணவர்களுக்கு இப்புத்தகத்தில் அடங்கியுள்ள பொதுவிஷயங்களாகிய சூரியன், பூமி, சந்திரன், நீர் நிலப்பிரிவுகள், நக்ஷத்திரங்கள், கிராமவாழ்க்கை, கைத்தொழில்கள், வண்டிப்பாதை, இருப்புப்பாதை, வியாபாரம், அரசாட்சி முதலியவைகளை பாடங்களின் மூலமாக எழுதிக்கற்பித்தபின் இஜ்ஜில்லாவைப்பற்றி போதிக்கவேண்டும்.

பொது விஷயங்களைக் கற்பித்தவுடன் அப்பாடங்கள் விஷயமாக சில அப்பியாசங்கள் கொடுத்து பையன்களை அதற்கு விடையை எழுதிக்கொண்டுவரும்படி செய்தால், பையன்கள் இலகுவாக பொதுவிஷயங்களை அதிசீக்கிரத்தில் கற்றுக்கொள்ளுவார்கள்.

ஆகையால் உபாத்தியாயர்கள் மாணவர்களுக்கு ஜில்லாவின் படத்தைக்கொண்டு போதிக்கவேண்டும். இன்னும் இப்புத்தகத்தில் இஜ்ஜில்லாவிலுள்ள தாலூக்காக்களைப்

பற்றியும், முக்கியபட்டணங்கள், யாத்திரை ஸ்தலங்களைப்பற்றி யும் விளக்கி எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் இப்புத்தகத்தில் இஜிஜில்லாவைப்பற்றிய பூர்வீக சரித்திரங்களைப் பற்றியும் தெளிவாய் எழுதியிருக்கிறது. ஆகையால் இதைகண்ணுரும் உபாத்தியாயர்கள் இதிலடங்கியுள்ள விஷயங்களை நன்குகவனித்து இப்புத்தகத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆக்கியோன்

121285

12 DEC 1930
MADRAS

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	திசைகள்	9
2.	ஸ்கேல் விபரம்	11
3.	பிளான்	13
4.	நக்ஷத்திரங்கள்	17
5.	சூரியன், பூமி, சந்திரன்	19
6.	பூமி	20
7.	சந்திரன்	22
8.	கிராமமும், சுற்றுப்பக்கமும்	23
9.	கைத்தொழிலின் விபரம்	26
10.	போக்குவரவுக்குரிய மார்க்கங்கள்	31
11.	ஜனங்களும், பாஷையும், மதமும்	33
12.	வியாபாரம்	33
13.	அரசாட்சி	34
14.	நீர் நிலப்பிரிவுகள்	35
15.	ஜில்லா	41
16.	இராமநாதபுரம் ஜில்லா	42
17.	இருக்குமிடம் பரிமாணம்	42
18.	இயற்கை அமைப்பு	44
19.	மலைகளும், நதிகளும்	45
20.	ஏரிகள்	47
21.	சீதோஷ்ண ஸ்திதி	48
22.	விளைபொருள்கள்	49

23. கைத்தொழில், ஏற்றுமதி, இறக்குமதி 50
24. போக்குவரவுக்குரிய மார்க்கங்கள் 51
25. ஜனங்கள், மதங்கள், பாஷைகள் 55
26. தாலூக்காக்களும் அதன்பட்டணங்களும் 56
I. சாத்தூர்தாலூக்கா 56
II. ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்கா 57
III. சிவகங்கை தாலூக்கா 60
IV. திருப்பத்தூர் தாலூக்கா 62
V. திருவாடானைத் தாலூக்கா 63
VI. இராமநாதபுரம் தாலூக்கா 64
VII. பரமக்குடி தாலூக்கா 68
VIII. முதுகுளத்தூர் தாலூக்கா 69
IX. அறுப்புக்கோட்டை தாலூக்கா 70
27. ஜில்லா சரித்திரம் 70
28. நாயக்கர்கள் 71
29. ஆங்கில அரசாட்சி 74
30. இராஜ வாழ்த்து 80

இராமநாதபுரம் ஜில்லா.

ஸ்கேல் 1 அங்குலம் = 24 மைல்.



நவீன

பூகோள சாஸ்திரம்

1. திசைகள்

பிள்ளைகளே! நீங்கள் காலையில் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் வானம் எப்படி இருக்கிறது? சற்று மந்தார மாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறதல்லவா? பின்பு சற்று நேரம் செல்லச்செல்ல எத்திசையில் என்ன பார்க்கிறீர்கள்? ஆகாயத்தில் நெருப்புப்போன்ற பந்துவடிவமானதைப் பார்க் கிறீர்களல்லவா? அத்திசையைத்தான் சூரியன் உதிக்கும் பக்கமென்று சொல்லுகிறோம். எந்தத்திசையில் சூரியன் மறை கிறதோ, அந்தத் திசையைச் சூரியன் அஸ்தமிக்கும் பக்கம் என்கிறோம். சூரியன் புறப்படும் பக்கம் (உதிக்கும் பக்கம்) கிழக்கென்றும், சூரியன் மறையும் பக்கம் (அஸ்தமிக் கும்பக்கம்) மேற்கு என்றும் சொல்லுகிறோம். நீங்கள் சூரி யன் உதிக்கும் பக்கத்தைநோக்கி நின்று, உங்களுடைய இரு கரங்களையும் நீட்டுங்கள். நீட்டும்பொழுது உங்களுடைய வலதுகை எப்பக்கமிருக்கிறதோ அப்பக்கம் தெற்கு என்றும், இடதுகை எப்பக்கமிருக்கிறதோ, அப்பக்கம் வடக்கு என் றும் பெயர்.



நீங்கள் வசிக்கும் இஜ்ஜில்லாவைப்பற்றி பின்னுல் படிக்கப் போகிறீர்களல் லவா? அப்போது அஜ்ஜில்லா படத் தின் திசைகளை எவ்வாறு அறியலாமென்பதை இனி அறி வோம். தாலூக்காப்படம், ஜில்லாப்படம், இராஜதானிப் படம், இந்தியா தேசப்படம், வேறு எவ்விதத் தேசப்படமா யிருந்தாலும், அப்படத்தின் தலைப்பக்கம் வடக்கென்றும், அடிப்பக்கம் தெற்கு என்றும், நாம் படத்தை நோக்கி நின்று இருகரங்களையும் நீட்டி நிற்கும், வலது கை எப்பக்கமிருக்

கிறதோ அப்பக்கம் கிழக்கென்றும், இடது கைப்பக்கம் மேற்கென்றும் தெரிந்து கொள்ளவேண்டும். மேற்குறித்துள்ள திசைகளை நாம் எளிதில் பகலில் தெரிந்துகொள்ளலாம். இராக்காலங்களில் சமுத்திரத்தில் செல்லும் மாலுமிகள் காம்பஸ் என்னும் காந்தக் கருவியைக்கொண்டு திசைகளைத் தெரிந்துகொள்வார்கள். இக்கருவி வட்டமாயிருக்கும். இக்கருவியின் மேல்தட்டில் திசைகளின் பெயர்கள் குறித்திருக்கும். தட்டின் மத்தியில் எல்லாப் பக்கங்களிலும் திரும்பக் கூடிய ஒருவிதமான ஊசி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.



இந்த ஊசி, காம்பஸ் எந்தப் பக்கத்திலிருந்தபோதிலும் வடதிசையை நோக்கியே திரும்பி நிற்கும். கப்பலில் செல்லும் மாலுமிகள், வடக்குத் திக்கைத் தெரிந்துகொண்டு, முன் சொல்லியபடி மற்றத் திக்குகளையும் அறிந்துகொள்வார்கள்.

2. ஸ்கேல் விபரம்

ஸ்கேல் என்றால் அளவு என்று பெயர். நாம் ஓர் அறையின் உருவத்தை வரைய வேண்டுமென வைத்துக் கொள்வோம். அவ்வறையின் நீளம் 20 அடி, அகலம் 15 அடி என்று வைத்துக்கொள். கற்பலகையின் நீளமும் அகலமும் மேற்கூறிய அளவுக்குக் குறைவாயிருப்பதால் அவ் அளவில் கற்பலகையில் எழுதமுடியாது. ஆகையால், கற்பலகையின் நீள அகலத்திற்குத் தக்கபடி அறையின் நீள அகலத்தின்



அளவை, ஓரடியை ஓரங்குலமாகவாவது அல்லது இரண்டு அங்குலமாகவாவது வைத்துக்கொண்டு, அறையின் நீளம் 20 அடியை, 20 அங்குலங்களாகவும், அல்லது 10 அங்குலங்களாகவும், அகலம் 15 அடியை 15 அங்குலங்களாகவும் அல்லது 7½ அங்குலங்களாகவும் வைத்துக் கோடு இழுக்கவேண்டும். 20 அங்குல்முள்ள கோட்டை முதலில் கற்பலகையில் இழுத்துக்கொண்டு 15 அங்குலமுள்ள கோட்டை மேலே இழுக்கப்பட்ட கோட்டுக்கு நேர் கோணமாக இழுத்து, உருவத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். இவ்வுருவத்தின் விஸ்தீரணம் எழுதினவர்களுக்கு மட்டும் தெரியும். மற்றவர்களுக்கு, இவ்வுருவத்தின் பரிமாணம் தெரியாததால், இவ்வுருவத்தின்கீழ் ஓரடிக்கு ஓர் அங்குலம் என்று எழுதவேண்டும். (ஸ்கேல் 1 அடி = 1 அங்) அடிக்கு அங்குலந்தான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படவில்லை. கெஜத்தை அடியாகவும், அங்குலமாகவும், மைலை கெஜமாகவும், அல்லது அடியாகவும், அல்லது அங்குலமாகவும், எனப் பலவாறாக அளவுகளை நாம் எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு நாம் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு ஸ்கேல் என்று பெயர்.

3. பிளான்



பிள்ளைகளே, நீங்கள் இதுவரையில், திசைகள், ஸ்கேல்இவைகளின் விபரங்களை படித்திருக்கிறீர்களல்லவா? இனிமேல் பிளான் என்பது என்ன என்பதைப் படிப்போம் கட்டிடத்தின் உருவத்தையும், அதன் அளவுகளையும், அதன் மேல் வைத்திருக்கும் வஸ்துக்களின் இடங்களையும் காட்டுவதற்குப் பிளான் என்று பெயர். பள்ளிக்கூடத்திலுள்ள கரும்பலகைகள் நாற்காலிகள்,

மேஜைகள், பெஞ்சுகள், முதலியவைகள் வியாபித்திருக்கு மிடம் ஆகிய, இவைகளின், நீளம், அகலம், கனம், அளவுகளைத் தெரிந்து, அதன்படி பிளான் வரையலாம். நீங்கள் நாள் தோறும் உபயோகப்படுத்தும் பென்ஸலின் பிளானைக் கீழே ஸ்கேலின்படி குறித்திருக்கும் படத்தைக் காணலாம்.



மேலே குறித்துள்ள படத்தைப் பாருங்கள். இது ஒரு பென்ஸலின்படம். நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கற்பலகைகளை எடுத்துக்கொள்ளுங்கள். அதில், நீங்கள்நாள்தோறும் உபயோகப்படுத்தும் காகிதப்பென்ஸலைச் சிலேட்டின் மத்தியில் வையுங்கள். அப்பென்ஸிலை வைத்து அதைச்சுற்றிச் சிலேட்டுக் குச்சியினுல் கோடு இழுங்கள். அதன்பின் அக்காகிதப் பென்ஸலை எடுத்து விட்டுப்பார்த்தால், அக்காகிதப் பென்ஸலின் உருவம் தெரியும். இதைப்போன்ற மற்ற பொருள்களுக்கும், கட்டிடங்களுக்கும், கதவுகளுக்கும், ஜன்னல்களுக்கும், புத்தகங்களுக்கும் ஸ்கேலின்படி பிளான் வரையலாம். படமென்று எதற்குப் பெயர்? தெரு, கிராமம், தாலூக்கா, ஜில்லா, இராஜதானி முதலியவைகளின் பிளானுக்குப் பூகோளசாஸ்திரத்தில் படமென்றுபெயர். ஒரு தேசத்தின் படத்தில் ஸ்கேலின்படி அத்தேசத்திலுள்ள ஏரிகள், நதிகள், மலைகள் முதலியவை வியாபித்த இடங்களைக் காட்டும். கிராமத்தைப் பற்றியாவது அல்லது ஜில்லாவைப்பற்றியாவது நாம் நன்ருய்த் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் அவைகளின் படம்

வேண்டும். அப்படத்தைக்கொண்டு, மலை, ஏரி, நதி, இருப்புப் பாதை, குளம் முதலியவைகளை அறிவதுடன், ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள நிலங்களின் தன்மைகளையும் நன்ருய்த் தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு அவ்வூர்களில் பயிர் செய்யப்படும் நன்செய், புன்செய், தானியங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். இன்னும் ஒவ்வொரு ஊர்களிலும் செய்யும் தொழில்களைப்பற்றியும் பேசும் பாஷையைப் பற்றியும், உடுக்கும் உடைகளைப்பற்றியும், சாப்பிடும் ஆகாரங் களைப்பற்றியும், அவ்வூர்களிலுள்ளவர்களின் பழக்க வழக்கங்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்விஷயங் களைக் கூறும் புத்தகத்திற்குப் பூகோள சாஸ்திரமென்று பெயர்.

கிராமத்திலுள்ள விஷயங்களைக்கூறும் புத்தகத்திற்குக் கிராம பூகோள சாஸ்திரமென்றும், ஜில்லாவிலுள்ள விஷ யங்களைக்கூறும் புத்தகத்திற்கு ஜில்லா பூகோள சாஸ்திரம் என்றும், இராஜதானியிலுள்ள விஷயங்களைக்கூறும் புத்த கத்திற்கு இராஜதானிப் பூகோள சாஸ்திரமென்றும் பெயர். இனி நாம் வசிக்கும் பூமியைப்பற்றிப் படிப்போம்.

நாம் வசிக்கும் இப்பூமியானது நிலமும் நீரும் சேர்ந் துள்ள பாகம். ஆகாயத்தில் தோன்றும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், இவைகளின் உருவம் எவ்வகைப்பட்ட தென்று நாம் அறிந்துகொள்ளலாம். பூமியின் வடிவத்தை அம்மாதிரிதெரிந்துகொள்ளமுடியாது. ஆனால் வேறுவிதத்தில் தெரிந்துகொள்ளலாம். நாம் பார்க்கக்கூடிய ஒவ்வொரு வஸ்துக்களின் உருவங்களை, அதனுடைய நிழலால் அறிந்து



கொள்ளலாமென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். அது போல் சந்திர கிரகணம் உண்டாகும் சமயத்தில் பூமியின் நிழல் சந்திரன் மேல் விழும்போது வட்டவடிவமாயிருக்கிற சந்திரன் மறைகிறது. ஆகையால் பூமியும் உருண்டை தானென்று எண்ணலாம். மேலும ஆகாயத்தில் தோன்றுகிற சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் வட்டவடிவமாய் இருப்ப தால் பூமியும் வட்டவடிவமாய்த்தானிருக்கவேண்டுமென்றும் எண்ணலாம்.

இன்னும், வேறு உதாரணங்களினுல் பூமி உருண்டை என்பதை விளக்கலாம். அதாவது, ஒருமனிதன் சமுத்திரக் கரையில் 'நின்றுகொண்டு, கரையிலிருந்து செல்லுகிற கப்பலைப் பார்த்துக்கொண்டேயிருந்தால், கொஞ்சம் கொஞ்ச மாக மறைந்து கடைசியாக முழுதும் மறைந்து கண்ணுக்குத் தெரியாமல போகிறது. மறைவதற்குக் காரணமென்னவென் ருல், கப்பல்போகும் இடம் மறைந்திருக்கவேண்டும். ஆகை யால் பூமி வட்டவடிவமாய் இருக்கவேண்டுமென்றும் எண்ண

லாம். மேலும் இன்னொரு உதாரணத்தினுல் பூமி வட்ட வடிவமானதென்பதையும் அறியலாம். அதாவது ஒருவன் ஒரு வளைந்த பாலத்தின் ஒரு முனையில் நின்றுகொண்டு பாலத்தின் வழியாகச் செல்லும், மனிதனைப் பார்த்துக்கொண்டிருந்தால், அவன் செல்லச் செல்ல அவன் உருவம் முழுவதும் மறைந்து கண்ணுக்குத்தெரியாமல் மறைந்து விடுகிறுன். ஆகையால் பூமியும் இவ்விதமாகத்தான் உருண்டையாயிருக்க வேண்டுமென்றும் எண்ணலாம். இன்னும் சில உதாரணங்களால் பூமி உருண்டை வடிவமுள்ளதென்பதையும் விளக்கலாம்.



4. நக்ஷத்திரங்கள்

பிள்ளைகளே, நீங்கள் நாள்தோறும் ஆகாயத்தில் தோன்றும் நக்ஷத்திரங்களைப் பார்த்திருப்பீர்களல்லவா? அவைகளை நீங்கள் வெள்ளி என்று சொல்லுவீர்கள். நீங்கள் ஆகாயத்தில்

இரவில் நக்ஷத்திரங்களை எந்தநேரங்களில், எவ்விடங்களில் காண்கிறீர்களோ, அவ்விடங்களில் முன்பார்த்த நேரத்திலேயே அந்நக்ஷத்திரங்களை அடுத்த நாளிலும் பார்ப்பீர்கள். உங்களுடைய பார்வைக்கு ஆகாயத்தில் தோன்றும் நக்ஷத்திரங்கள் மேற்கே நகருவதாகத் தோன்றும். உண்மையாக நக்ஷத்திரங்கள் நகரவில்லை. நக்ஷத்திரக் கூட்டங்களின் உருவமும் மாறவில்லை. அசுவணி, பரணி, கிருத்திகை முதலிய நக்ஷத்திரங்கள் பலவித உருவங்களுடனிருக்கின்றன.



பிள்ளைகளே, பூமியானது சுற்றுகிறது என்று சொன்னால் உங்களுக்கு ஓர் வியப்பு உண்டாகலாம். பூமியானது சுற்றிக்கொண்டு வந்தால், நீங்கள் இருக்கும் வீடுகளும், வாசிக்கும் பள்ளிக்கூடங்களும் விழுந்துவிடுமென்று நீங்கள் எண்ணலாம். அதன் விபரத்தைப் பின் வருமாறு நீங்கள் தெரிந்துகொள்ளலாம். அதாவது Pole நக்ஷத்திரத்திற்கு

நேரில் ஒருவன் நின்று பார்த்தால், சூரியன் உதயமாகும் திசை வலதுபக்கமென்றும், அஸ்தமிக்கும் பக்கம் இடது பக்கமென்றும் தெரியும். இவ்விதம் வரும்படியாகப் பூமியானது மேற்கிலிருந்து கிழக்குமுகமாகச் சுற்றுகிறது. உதாரணமாக, நாம் புகைவண்டி ஏறிப்பிரயாணம் போகும் பொழுதுஇரண்டு பக்கங்களிலுமுள்ள மரங்கள், செடிகள்,வீடுகள், மலைகள் முதலியவைகள் நமக்கு எதிர்திசையை நோக்கி வேகமாய்ப் போகிறதுபோல் தோன்றும். உண்மையில் அவைகள் போகவில்லை. புகைவண்டிமாத்திரம் செல்லுகிறது. இப்பூமியானது ஒருமணிநேரத்தில் சுமார் 1000, மைல் வீதம் மேற்கு திசையிலிருந்து கிழக்குமுகமாய்ச் சூரியனைச் சுற்றுகிறது. இப்படி பூமியானது சுற்றுவதால், பூமியோடு செல்லும் நமக்குச் சூரியன் (எதிர்பக்கமாய்) கிழக்கிலிருந்து மேற்கு முகமாய்ப்போவதாகத் தெரிகிறது. அது உண்மையல்ல. நாம் வசிக்கும் இப்பூமிக்கு எல்லாப் பொருள்களையும் இழுத்துக்கொள்ளும் வல்லமை உண்டு. அவ்வல்லமைக்கு ஆகர்ஷணசக்தி என்று பெயர். இச்சகதியின் உதவியால் நம்முடைய வீடு முதலியவைகள் விழாமலிருக்கின்றன.

5. சூரியன், பூமி, சந்திரன்

நமக்கு நாள்தோறும் பகலில் வெளிச்சம் கொடுப்பது சூரியன். இது ஓர் அக்கினிகோளம். இச்சூரியன் நமக்கு நாள்தோறும் பகலில் உஷ்ணமும் வெளிச்சமும் கொடுத்துக் கொண்டுவருகிறது. இவ்வெளிச்சத்தினுல் நாம் ஒவ்வொரு பொருள்களையும் நன்றாய் அறியவும், பகலில் தொழில்கள் செய்யவும் இன்னும் மற்ற விஷயங்களுக்கும் அனுகூலப்

படுகின்றது. சூரியன் அஸ்தமித்தவுடன் நமக்கு இருட்டாகிவிடுகிறது.

சூரியன் நாள்தோறும் கிழக்கிலுதித்து, மாலையில் மேற்கில் அஸ்தமிக்கிறது. சூரியன் நாம வசிக்கும் பூமியைக் காட்டிலும் 13 லக்ஷம் மடங்கு பெரியது. சூரியன் உருண்டை வடிவமுள்ளது. சூரியன தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுகிறதேயொழிய மற்ற கிரகங்களைச் சுற்றுகிறதில்லை. நாம் வசிக்கும் பூமிக்குச் சற்றேறக்குறைய 10 கோடிமைல் தூரத்தில் சூரியன் இருக்கிறது. சூரியன் மிகவும் தூரத்தி லிருப்பதால் நமது கண்ணுக்கு மிகச்சிறியதாகத் தோன்று கிறது. சூரியனைப் பகலில் 12 மணிக்கு நீங்கள் பார்த்தால், உங்களுடைய கண்கள் கூசும். ஏனென்றால், சூரியன் மிகவும் உஷ்ணமாயிருப்பதால் இவ்விதம் கூசுதல் ஏற்படுகின்றது.

6. பூமி

நாம் வசிக்கும் இப்பூமியானது ஏறக்குறைய கிச்சிலிப் பழத்தைப்போல் உருண்டை வடிவமுள்ளது. பூமியின் சுற்றளவு 25000 மைல். இதன் குறுக்களவு 8000 மைல் உள்ளது. பூமிக்கு இரண்டுவித சலனங்கள் உண்டு. அதாவது பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொள்வதுஒன்று; இரண்டாவது, தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனை யும் சுற்றுகிறது. பூமி தன்னைத்தானே ஒரு தரம் சுற்றுவ தற்கு ஒரு நாள் ஆகிறது. (24 மணி நேரம்) இதற்குத் தின கதி என்று பெயர். பூமி சூரியனை ஒரு தடவைச் சுற்றிவர $365\frac{1}{4}$ நாட்கள் செல்லுகின்றன. இதற்கு வருஷகதி என்று

பெயர். பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிக்கொண்டு வருவதால், பகலும், இரவும், வெப்பமும், குளிர்ச்சியும் உண்டாகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும்சுற்றிக்கொண்டு வரும்பொழுது, அப்பூமியின், சூரியனுக்கு எதிராகவரும் பாதிப்பாகம் வெளிச்சமாகவும், மற்றைப் பாதிப்பாகம் இருட்டாகவும் இருக்கிறது. பூமியின் வெளிச்சமான பாகத்தை பகல் என்றும், இருட்டாயுள்ள பாகத்தை இரவென்றும் தெரிந்து கொள்ளவேண்டும். பிள்ளைகளே நீங்கள் கீழேகாட்டியுள்ள உதாரணத்தைக்கொண்டு நன்றாய் அறிந்துகொள்ளலாம்.



அதாவது, முதலில் நீங்கள் விளக்கைச் சூரியனாகவும், பந்தை பூமியாகவும் வைத்துக்கொள்ளுங்கள். பிறகு ஒரு இருட்

டறைக்குள் விளக்கை ஏற்றிவைத்து, அதன் பக்கத்தில் பந்தை சுற்றினால் பந்து சுழலும்போது, விளக்கின் பக்கம் வரும்பாகம் வெளிச்சத்தையும், விளக்கின் வெளிச்சம் விழுகாத பாகம் இருட்டையும் அடைகின்றன. அதுபோல சூரிய வெளிச்சம் பூமியில் எந்தப்பாகத்தில் விழுகிறதோ அப்பாகத்தைப் பகலென்றும் வெளிச்சம் விழுகாதபாகத்தை இரவு என்றும் சொல்லுகிறோம். பந்தானது ஒரு மூனையை ஆதாரமாகக்கொண்டு சுற்றி வருகிறது. பூமியானது ஒன்றினுடைய உதவியுமில்லாமல் அந்தரத்தில் சுற்றுகிறது. ஒரு பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள்.

7. சந்திரன்

இது பூமியிலும் சிறியது. பிள்ளைகளே இராக்காலங்களில் உங்களுக்கு வெளிச்சம் கொடுப்பது எது? சந்திரன் பூமியைச்சுற்றும் கோளம். சந்திரன் ஒரு குளிர்ச்சியான கோளம். சந்திரன் இரவு தோறும் வெளிச்சம் கொடுக்கிறதில்லை, சந்திரனுக்கு மூன்று சலனங்கள் உண்டு (சலனம் = அசைவு) அதாவது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு பூமியையும்சுற்றுகிறது. பூமியுடன் சேர்ந்து சூரியனையும்சுற்றி வருகிறது. பௌர்ணமி தினம் சந்திரன் இரவுமுழுதும் பிரகாசிக்கிறது. அமா



வாசை தினம் பிரகாசிப்பதேயில்லை. அமாவாசைக்குப் பிறகு சூர்யாஸ்தமன காலத்தில் வில்வளைவுபோல் சந்திரன் பிரகாசிக்கும். வளைந்த பாகத்தைப் பிறைச்சந்திரன் என்று சொல்லுகிறோம். முன் நிலா எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அந்தக்காலத்திற்குச் சுக்கிலபக்ஷம் என்றும், முன இருட்டும் பின் நிலாவும் எந்தக்காலத்திலுண்டாகிறதோ, அந்தக்காலத்திற்குக் கிருஷ்ணபக்ஷம் என்றும் பெயர். சந்திரன் பூமியை ஒரு தரம் சுற்ற 29 நாள் ஆகிறது. பௌர்ணமி தினத்திலிருந்து கொஞ்சம கொஞ்சமாகக் குறைந்து 15-ம் நாள் சந்திரன் பூராவும் தெரிகிறதில்லை. சந்திரன் பூராவும் தெரியாமலிருக்கும் தினத்தை அமாவாசை எனகிறோம். பௌர்ணமி தினத்திலிருந்து சந்திரனின் உருவம் குறைவதாகக் காணப்படும் நாட்களை தேய்பிறை (கிருஷ்ண பக்ஷம்) என்று சொல்லுகிறோம். அமாவாசை தினத்திற்குப் பின்னால் சந்திரனின் உருவம் வளருவதாகக் காணலாம். அந்நாட்களை வளர்பிறை (சுக்கிலபக்ஷம்) என்று சொல்லுகிறோம். வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி உண்டாகும் விதத்தை இங்கு காட்டியுள்ள படத்தின்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

சந்திரனுக்கு இயற்கையில் ஒளியில்லை. சூரியனிடத்திலிருந்து வெளிச்சத்தை அடைந்து நமக்குக்கொடுக்கிறது. சூரியனுக்கு அசைவு ஒன்று; பூமிக்கு அசைவு இரண்டு; சந்திரனுக்கு அசைவு மூன்று. (சலனம்—அசைவு)

8. கிராமமும் சுற்றுப்பக்கமும்

நாம் வசிக்கும் இவ்வுலகத்தில் கிராமங்களே ஆதியில் உண்டாயின. கிராம வாழ்க்கையே மானிட வாழ்க்கைக்கு

மேலானதாகும். "கிராமங்கள் கடவுளாலுண்டாக்கப்பட்டவை, நகரங்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டன." என ஒரு ஆங்கிலப் பழமொழியுண்டு. ஒரு தேசத்தில் கிராமங்கள் எவ்வித நிலைமையில் இருக்கின்றனவோ அதற்குத் தக்கபடி தான் அத்தேசத்தின் நிலைமையுமிருக்கும். கிராமங்களே இராஜாங்கத்திற்கு ஆதாரம். இப்பொழுது நீங்கள் ஒரு கிராமத்தில் வசிப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அக்கிராமத்திலுள்ள தெருக்கள் எத்தனை யென்றும், கோவில்களும் பள்ளிக்கூடங்களும், சத்திரங்களும் இருப்பதையும் பார்த்திருப்பீர்கள். கிராமத்தின் சுற்றுப்பக்கங்களில், பல மரங்களிருப்பதைக் காணலாம். அநேக மரங்கள் சேர்ந்து இருக்கும் இடத்திற்குத் தோப்பு என்று பெயர். இன்னும் இதைத் தவிர பல பயிர்கள் வளர்ந்திருப்பதைக் காணலாம். அப்பயிர்கள் எந்த நிலத்தில் விளைகின்றன? நிலங்களில் இரண்டுவகை உண்டு. அவை நன்செய், புன்செய் எனப்படும். நன்செய் நிலங்களில் நெல், கரும்பு, வெற்றிலை, வாழை முதலிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன. புன்செய் நிலங்களில் சன்னல் சோளம், கம்பு, கேழ்வரகு, மொச்சை, துவரை முதலிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன. நமது நாட்டிலுள்ள கிராமங்களில் முக்கியமாய்ப் பயிரிடுவது நெல் கிராமத்தின் சுற்றுப்புரத்தில் நெல் வயலைப் பார்க்கலாம். இது நன்செய் நிலங்களில் பயிராகும். இதற்கு ஜலமும் வெய்யிலும் அதிகமாய் வேண்டும். நெல் விளையும் நன்செய் நிலத்தை முதலில் உழுது பண்படுத்தி, விதைத்துக் காலந்தவறாமல் தண்ணீர் பாய்ச்சி பயிர் வளர்ந்தபிறகு களை எடுக்கவேண்டும். பயிர் நன்றாய் வளர்ந்தபின் கதிர் உண்டாகும். கதிர்கள் நன்றாய் முற்றி தலைசாய்ந்திருக்கும்போது 'தாளும்

பழுத்துவிடும். அப்போது வேளாளன், அரிவாளைக்கையிற் கொண்டு தாளை அறுப்பான். தாளை ஒன்று சேர்த்துக் கட்டுக் கட்டாகக் கட்டிக் களத்தில் கொண்டுவந்து சேர்ப்பான். அதைக் கயிற்றால் கட்டி இறுகப்பிடித்துக்கொண்டு, தரை மேல் அடித்து உதறுவான். கதிர்களிலுள்ள நெல்களெல்லாம் கீழே உதிர்ந்துவிடும். பிறகு நெல்லைத்தூற்றி நெல் வேறாக வும், கருக்காய் வேறாகவும் பிரிந்துபோனபிறகு, நெல்லை யெல்லாம் தன் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பான். கொஞ்சநாள் சென்றபிறகு மறுபடியும் பயிர்செய்ய ஆரம் பிப்பான். இன்னும் கிராமங்களைச் சுற்றிச் சில இடங்கள் மேடாயிருக்கும். அம்மேட்டு நிலத்தைப் புன்செய் என்று சொல்வோம். புன்செய் நிலத்தின் மண்கள், கறுப்பு நிற முள்ளதாகவும், செம்மண்ணாகவும், செம்மண்ணும் மணலும் கலந்துமிருக்கின்றன, புன்செய் நிலங்களில் மேலே குறித் துள்ள பயிர்களை விளைவிக்கக், குடியானவர்கள் கிணறுகள் தோண்டி, கிணற்று நீரைப் பாய்ச்சியும், மழையின் உதவி யாலும் பயிராக்குகிறார்கள். கிராமத்தைச் சுற்றியுள்ள சில இடங்களில் உப்புமண்ணுள்ள நிலங்களாயிருக்கும். உப்பு மண்ணுள்ள நிலங்களில் ஒன்றும் விளையாது. இம்மண் துணிகளின் அழுக்கைப்போக்க உபயோகப்படுகின்றது. மண்ணில் பலவிதங்களுண்டு. 1. மணல் அதிகமான மண் 2. களி அதிகமான மண் 3. மணலும் களியும் கலந்து சமமா யுள்ள மண் 4. வண்டல் மண். 5. சுக்கான் மண் 6, களர்மண் இன்னும், கிராமங்களைச்சுற்றி நன்செய் நிலங்களும் புன் செய் நிலங்களும் இருப்பதல்லாமல், சில இடங்களில் பயி ரிடாமல் இருக்கின்றன. அவ்விடங்களில் அவ்வூரிலுள்ள ஆடுமாடுகள், அங்குள்ள புற்களை மேய்வதற்கு அனுகூல மாகிறது. பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படும் பொருள் களுக்கு உலோகங்கள் என்று பெயர். பூமியிலிருந்து தங்

கம், வெள்ளி, செம்பு, இரும்பு, தாமிரம், ஈயம், பொன், கருங்கல், சந்தனக்கல், சுக்கான் அல்லது சுண்ணும்புக்கல், சலவைக்கல், ஸ்லேட், களிமண், நிலக்கரி, கல்உப்பு முதலிய பொருள்கள் வெட்டி எடுக்கிறார்கள். உங்கள் ஊரி லுள்ள வீடுகளுக்கு வெள்ளையடிக்க சுண்ணும்பை உபயோ கிக்கிறார்களல்லவா! சுண்ணும்பு கல்லைக் காளவாய்களில் சுட்டு கரியமலவாயுவை நீக்கி நீராக்கி அதை, பூசும் சுண்ணும் பாகவும், அச்சுண்ணும்புடன் சிறிதளவு மணலும் சேர்த்து வீட்டில் தலம் போடவும் உபயோகிக்கிறார்கள்.

9. கைத்தொழிலின் விபரம்

உலகத்தில் செல்வமும் சிறப்பும் அடைந்திருக்கும் ஒவ் வொரு நாடும் கைத்தொழிலாலேயே மேலான நிலைமையை அடைந்திருக்கிறது. இவ்வுலகத்திலுள்ள ஜீவப்பிராணிகள் எல்லாவற்றிற்கும் அவசியம் வேண்டியது உணவு. ஜனங்க ளெல்லோரும் கஷ்டப்பட்டு சம்பாதிப்பது உணவுக்கே. விளை பொருள்கள் அதிகமாய் விளையக்கூடிய இடங்களிலேயே, ஜனங்கள் குடியேறி பெரிய பட்டணங்களாகிறது. நம்மு டைய ஜில்லாவில், நெல், சோளம், துவரை, உழுந்து, கம்பு முதலிய தானியங்கள் விளைகின்றன.

இப்படத்தில் ஒரு குடியானவன் நிலத்தை உழுதுக்கொண்டிருப்பதைப் பாருங்கள். நிலத்தை உழுது பயிரிடு பவனுக்குக் குடியானவன் என்று பெயர். நிலத்தைப்பண்படுத்துவதற்கு முக்கியமாய்க் கருவி வேண்டும். அக் கருவிக்குக் கலப்பை என்று பெயர். இத்தொழில் செய்வதற் குக்கலப்பைகளையும், வேண்டியமாடுகளையும் குடியான்வர்கள்



குடியானவன்

வைத்திருக்கிறார்கள். குடியானவன் கலப்பையைக்கொண்டு நிலத்தை உழுது பண்படுத்தி விதைத்துத் தண்ணீர் பாய்ச்சி, பயிர் வளர்ந்தபின் களை எடுத்து, பயிர் விருத்தியாவதற்கு முக்கியமான பல காரியங்கள் செய்யத் தச்சன், கொல்லன், கன்னான் முதலிய தொழிலாளர்களின் உதவியும், குடியானவனுக்கு வேண்டியிருக்கிறது. மரவேலை செய்பவனுக்குத் தச்சன் என்று பெயர்.



தச்சன்

இப்படத்தில் தச்சன், மரத்தை உளியினால் செதுக்கிக் கொண்டிருப்பதைப் பாருங்கள். விவசாயத்திற்கு வேண்டிய கலப்பை, பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும் உட்காருவதற்கு வேண்டிய நாற்காலிகள், மேஜைகள், சாய்மான பலகைகள், மாணாக்கர்கள் எழுதும் கற்பலகையின் சட்டங்கள் கத்திப்பிடிகள், வீட்டிற்குவேண்டிய கதவுகள், மரத்தூண்கள், உத்தரங்கள் முதலிய சாமான்கள்செய்து கொடுப்பவனே தச்சன். இவனுடைய தொழிலுக்கு வேண்டிய முக்கிய ஆயுதங்கள், ரம்பம், உளி, கொட்டாப்புளி, இழைப்புளி, சுத்தி முதலியவைகளாம். கொல்லன் இரும்பைச் சம்மட்டியால் அடித்துக்கொண்டிருப்பதைப் பாருங்கள்.



கொல்லன்

இரும்பினால் சாமான்களும், ஆயுதங்களும் செய்பவனுக்குக் கொல்லன் என்று பெயர். கொல்லன், தச்சனுக்கு வேண்டிய உளி, கொட்டாப்புளி, இழைப்புளி ரம்பம்,

வாள், சுத்தி முதலிய ஆயுதங்களையும். விவசாயத்திற்கு வேண்டிய அரிவாள், மண்வெட்டி, கோடரி முதலிய ஆயுதங்களும் ஆணி, பூட்டு, காண்டி, சங்கிலி, கீல், ஊசி, தாழ்ப்பாள், கத்தி முதலிய சாமான்களும், தட்டானுக்கு வேண்டிய அரம், முதலிய சாமான்களும் செய்து கொடுக்கிறான்.

தாமிரம், வெண்கலம், பித்தளை இவ்வுலோகங்களால் பாத்திரங்கள் செய்பவனுக்குக் கன்னான் என்று பெயர்.

நாம் அணிந்துகொள்ளும் தங்கம், வெள்ளி, ஆபரணங்களைச் செய்துகொடுக்கும் தொழிலாளனுக்குத் தட்டான் என்று பெயர்.



நெசவுத்தொழில்

விவசாயத்திற்கு அடுத்தது நெசவுத்தொழில். இத்தொழிலைச் சிறியோர், பெரியோர், யாவரும் வீட்டில் நிழலில் உட்கார்ந்தபடியே செய்யக்கூடிய தொழிலாகும். இத் தொழிலாளர்களைச் சேணியரென்கிறார்கள். இவர்கள் வெகுகாலமாகப் பருத்தியைச் சுத்தப்படுத்தி, நூல் நூற்றுப் பலவிதத்துணிகள்நெய்து கொண்டுவந்தார்கள். இப்படத்தைப் பாருங்கள். இப்படத்தில் துணி நெய்யும் விதத்தைக் காட்டப்பட்டிருக்கிறது. நமது நாட்டில், கொஞ்சகாலமாய் நூல் நூற்கும் தொழில் நடைபெறவில்லை. ஏனென்றால் தகுந்த கூலி கிடைக்காததால் நமது நாட்டில் விளையும் பருத்தியை வெளி நாடுகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். கையினால் நெய்த

துணியைக்காட்டிலும், இயந்திரங்களினால் நெய்யப்பட்டு வருகிற துணிகள் ஒரேகனமுள்ளதாயும் விலை மிகவும் குறைவாயிருக்கிறபடியாலும் ஜனங்கள் கையினால் நெய்த துணிகளை வாங்குகிறதில்லை. சர்க்காரின் உதவியால், சுலபமாய்த் துணிகளை நெய்யும்படியான இயந்திரங்களைக்கண்டு பிடித்து, முன் கையால் நெய்யப்பட்ட துணிகளின் மாதிரியைப்போல வேஷ்டிகளும் சேலைகளும் நெய்யும் முறையைப் பலவிடங்களிலும் விருத்திசெய்து வருகிறார்கள். தற்காலம் நமது மாபெருந் தலைவர் மகாத்மா காந்தியவர்களும் நாட்டு கை நெசவுத் தொழிலை விருத்திசெய்யும்படி போதித்து வருகிறார்கள். முதலில் கல்வி கற்று, பின் நெசவுத்தொழில் செய்தால், பஞ்சில் எத்தனை விதங்களிருக்கின்றனவென்றும், எங்கெந்த விடங்களில் என்னென்ன விதமான பருத்தி விளையுமென்றும் இன்னும் பல விஷயங்களை அறிந்துகொள்ளமுடியும். இவ் விஷயத்தை அறிந்து, இப்போது பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பதுடன் இத்தொழிலையும் சில பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றன.



செக்கான்

இப்படத்தைப் பாருங்கள். வாணியன் செக்கில், எண்ணெய் எடுக்கிறான். எள்ளு, ஆமணக்கு, நிலக்கடலை தேங்காய், மணிலாக்கொட்டை முதலிய எண்ணெய் வித்துக்களை செக்கான்கள் நன்றாய் வெய்யிலில் உலர்த்திச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறார்கள். எள்ளினால் எடுக்கப்படும் எண்ணெயைப் பலகாரங்

களுக்கும், உடம்பில் தேய்த்துக்கொள்ளவும் உபயோகப்படுகி றது. நிலக்கடலே, ஆமணக்கு இவைகளினுல எடுக்கப்படும் எண்ணெய்யை நமது நாட்டில் விளக்குகளுக்கும் உபயோகப் படுத்துகிறுர்கள். நல்லெண்ணெய்யை நாம் உபயோகப் படுத்து வதைப்போல், திருவாங்கூர், மலேயாளம், தென்கன்னடம் ஜில்லாக்களில் தேங்காய் எண்ணெய்யை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறுர்கள்.

குயவன்:—உங்களுடைய வீடுகளில் மண்ணுல் செய்யப் பட்ட பாத்திரங்களேப் பார்த்திருப்பீர்கள். மண் பாத்திர ங்கள் செய்யும் தொழிலாளனுக்குக் குயவன் என்று பெயர். குயவன், களிமண்ணேக்கொண்டு வந்து அதிலிருக்கும் சிறுகற் களே எடுத்துவிட்டுப்பக்குவப்படுத்திச் சக்கரத்தில் வைத்துச் சுழற்றுகிறுன். பிறகு தன்னுடைய கைகளினுல், வேண்டிய அளவுப்பிரகாரம் பாண்டத்தைச் செய்கிறுன். அப் பாண்டத்தை நெருப்பில் சுட்டெடுத்துப் பலவிடங்களில் விற்பனே செய்கிறுன்.

வண்ணுன்:—நம்முடைய அழுக்குத்துணிகளே வெளுப் பவன் வண்ணுன். நாம் நாள்தோறும் சுத்தமான துணி களேத் தரித்துக்கொண்டிருக்க வண்ணுன் உதவி அவசியம் வேண்டியது.

இதற்குமுன் சொன்ன தொழிலாளர்களேத் தவிர, இன்னும்பலவிதமானத் தொழிலாளர்கள் இருக்கிறுர்கள். புகையிலேயைப் பக்குவப்படுத்திச் சுருட்டு செய்து விற்பவர் கள். நாம் காலில் அணிந்துகொள்ளும் பூட்ஸ், செருப்பு முதலியவைகளேத் தோலினுல் செய்து விற்பவர் சக்கிலியர்கள்.

மீன்களைப்பிடித்து உப்பிட்டு வெய்யிலில் உலர்த்தி விற்பனை செய்பவர் செம்படவர்கள். இன்னும் சில இடங்களில் ஆடு மாடுகளை வளர்த்துப் பாலைக்கறந்து விற்பனை செய்கிறவர்கள் இடையர்கள். பாலிலிருந்து, தயிர், மோர், வெண்ணெய், நெய் செய்துவிற்பனை செய்கிறார்கள். இதைத்தவிர பலவிதத் தொழில்களும் நடக்கின்றன.

10. போக்கு வரவுக்குரிய மார்க்கங்கள்

இருப்புப் பாதை மார்க்கங்கள்:—நீங்கள் புகை வண்டிகளை முன் பாடத்தில் பார்த்திருப்பீர்கள். முதலிலிருக்கும் உருவத்திற்கு என்ஜின் என்று பெயர். இரும்புகளினாலும், எஃகினாலும் என்ஜின் செய்யப்பட்டிருக்கிறது. இதன் பின் பக்கத்தில் இணைக்கப்பெற்ற வண்டிகளில் ஜனங்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். என்ஜின் நீராவியின் உதவியால் இழுக்கப்படுகிறது. இவ்வண்டி போவதற்கு மேடுபள்ளமில்லாதபடி சமப்படுத்திய பாதை போடப்பட்ட தண்டவாளங்களின் மேல் இவ்வண்டி ஓடுகிறது. சொற்பச் செலவில் அதிக தூரமுள்ள இடங்களுக்குப்போக இம்மார்க்கம் அனுகூலமாயிருக்கிறது. இவ்வண்டி போகக்கூடிய வழியிலிருக்கும் பட்டணங்களுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்ய அனுகூலப்படுகின்றன. இன்னும் கடிதப் போக்கு வரவுக்கும் உதவியாகிறது. அதிக தூரமுள்ள ஊரிலிருக்கும் நமது பந்துக்களின் அவசர விஷயங்களை (தந்திச் சமாச்சாரங்கள்) அறிவதற்கு, இருப்புப் பாதைக்குச் சமீபத்தில் போடப்பட்டிருக்கும் கம்பிகள் உபயோகப்படுகின்றன.

படகு, புகைக்கப்பல் மார்க்கங்கள்;— பிள்ளைகளே, நீங்கள், மதுரையில் தைபூசத்தில் மாரியம்மன் கோவில் தெப்பக்குளத்தில் நடக்கும் தெப்பத்திருவிழாவில், நடுமண்டபத்திற்கு அநேக ஜனங்கள் படகுகளில் ஏறி அம்மண்டபத்திற்கு போவதைப் பார்த்திருப்பீர்கள். இன்னும் சில ஊர்களின் சமீபத்திலுள்ள நதிகளில் ஜலம் அதிகமாய் வந்துவிட்டால், அக்கரையிலுள்ள ஊர்களுக்கு நதியைக்கடந்து போக, படகுகளிலும், பாய்மரக் கப்பல்களிலும் போகிறார்கள். கடல், சமுத்திரங்களைக் கடக்கப் புகைக்கப்பல்களில் பிரயாணம் செய்கிறார்கள். போக்கு வரவுக்கு இவைகளும் அனுகூலமானவை.

வண்டிப் பாதைகள்:— இருப்புப் பாதைகளில்லாத இடங்களில், கட்டை வண்டிகளும், குதிரை வண்டிகளும், பொதி மாடுகளும், மோட்டார் வண்டிகளும், போக்கு வரவுக்கு உபயோகமாகின்றன. இன்னும் சில இடங்களில் ஜனங்களே மூட்டைகளைச் சுமந்துகொண்டு போகிறார்கள். மேற்கண்ட வண்டிகள் போவதற்கும், ஜனங்கள் ஆடுமாடுகள் நடப்பதற்கும் வசதியாக, ரஸ்தாக்கள் மேடுபள்ளமில்லாமலிருக்கச் சரளைக்கற்களைப் போட்டுச் சமப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ரஸ்தாக்களின் இருபுறங்களிலும் நிழல் தருவதற்கு மரங்கள் வைத்திருக்கிறார்கள். ரஸ்தாக்களின் இடையில், ஓடைகள், கால்வாய்கள், நதிகள் குறுக்கிட்டால், அவ்விடங்களில் போக்கு வரவுக்கு அனுகூலமாக பாலங்கள் கட்டியிருக்கிறார்கள். சுமைகளைச் சுமந்து கொண்டுபோகும் ஜனங்கள் சுமைகளை இறக்கிவைத்து இளைப்பாறுவதற்கு கல் மேடைகள் (சுமைதாங்கி) வைத்திருக்கிறார்கள்.

11. ஜனங்களும் பாஷையும் மதமும்

உலகத்தில் கடவுளால் உண்டாக்கப்பட்ட ஜீவப்பிராணிகளில் மனித வகுப்பு மிகவும் உயர்ந்தது. மனிதர்களுக்கு, நன்மை, தீமை என்பதை அறியக்கூடிய பகுத்தறிவுஉண்டு. இஜ்ஜில்லாவில் பலர் நிலங்களை உழுது பயிரிட்டு ஜீவிக்கிறார்கள். இன்னும் சிலர் கைத்தொழிலாலும், வியாபாரம் செய்தும் ஜீவிக்கிறார்கள். இஜ்ஜில்லாவில் வழங்கும் மதங்கள் மூன்று. அதாவது இந்துமதம், கிறிஸ்துவ மதம், முகம்மதிய மதம். முன் பெரிய மகான்கள் கூறிய வேதங்களைக் கைக்கொண்டு அதன்படிக் கடவுளைத் துதிப்பவர்கள் இந்துக்கள. முகம்மது ஆதியில் அரேபியாதேசத்தில் உபதேசித்து வந்த மதம் முகம்மதிய மதம். இயேசு கிறிஸ்து ஆதியில் ஏற்படுத்திய மதம் கிறிஸ்துவ மதம். இந்துக்களில் பலர் தமிழ், தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம், முதலிய பாஷைகள், பேசுகிறார்கள். முகம்மதியர்களில் சிலர் இந்துஸ்தானி பாஷையும், சிலர் தமிழும் பேசுகிறார்கள். மூன்று மதஸ்தர்களிலும் பொதுவாக சிலர் ஆங்கில பாஷையைப்பேசுகிறார்கள்.

12. வியாபாரம்

பொருள்கள் கிடைக்குமிடத்திலிருந்து வாங்கிக்கொண்டுபோய், கிடையாத இடங்களில் அப்பொருள்களைக் கொண்டுபோய் விற்பதற்கு வியாபாரம், வர்த்தகம என்று பெயர். நாம் உண்ணும் ஆகாரப் பொருள்களுக்கும், நாம் உடுத்திக்கொள்ளும் உடைகளுக்கும் ஆதாரம் நிலம். நம்முடைய ஊர்களில், பயிரிடப்படும் பொருள்களில் தேவை

யானதுபோக, மீதமான பொருள்களை விற்கிறோம். நமக்குக் கிடைக்காத பொருள்களைச் சந்தையிலாவது, மற்ற ஊர்களிலாவது வாங்கிக்கொள்ளுகிறோம். நம்முடைய ஊரிலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படும் பொருள்களுக்கு ஏற்றுமதி என்றும், வெளியூர்களிலிருந்து நம்முடைய ஊரில்வந்து இறங்கும் பொருள்களுக்கு இறக்குமதி என்றும் பெயர். வியாபாரம் செய்வதற்கு முக்கியமாய் கல்வி வேண்டும். ஏனென்றால் வியாபாரம் செய்பவனுக்கு (வர்த்தகனுக்கு) எங்கெந்த காலத்தில் எந்தெந்தப் பொருள்கள் செலவாகுமோ, அந்தந்தப்பொருள்களை வாங்கி விற்பதற்கும்வரவு செலவு கணக்கு வைத்துக்கொண்டு, தன் லாப நஷ்டத்தை யறிவதற்கும், கல்வி அவசியமானது.

---

13. அரசாட்சி (துரைத்தனம்)

நாம் வசிக்கும் தேசம் இந்தியா. இத்தேசமானது, இங்கிலாந்தின் அரசராகிய, மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. நமது சக்கரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்ட தேசங்கள் அநேகமிருப்பதால், நாம் வசிக்கும் தேசத்தின் இராஜ்ஜிய நிர்வாகம் செய்ய, நமது சக்கரவர்த்தி வசிக்கும் இங்கிலாந்தில் இந்தியா மந்திரி என்ற ஒரு அதிகாரியை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நமது தேசமுழுவதும் ஆளுவதற்கு வைஸ்ராய் என்னும் பட்டப் பெயர் கொண்ட ஒருவரைஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவர் நமது தேசத்தின் தலைமை நகராகிய டில்லிமாநகரத்தில் வசிக்கிறார். தேசமுழுவதும் ஒருவரே ஆளுவதென்றால் மிகவும் கஷ்டமானதென்று ராஜாங்கத்தார்

அறிந்து, பல பிரிவுகள் ஏற்படுத்தி ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு அதிகாரிகளை நியமித்து, சுலபமாக ஆளும்படி செய்திருக்கிறார்கள். கிராமங்களை மேல்பார்ப்பதற்குக் கிராம முனிசீபுகள் என்ற அதிகாரிகளையும், தாலூக்காக்களை மேல் பார்ப்பதற்கு தாசில்தார்கள் என்ற அதிகாரிகளையும், ஜில்லாக்களை, மேல்பார்ப்பதற்கு கலெக்டர்கள் என்ற அதிகாரிகளையும், இராஜதானிகளை மேல்பார்ப்பதற்கு கவர்னர்கள் என்ற அதிகாரிகளையும் நியமிக்கப்பட்டு நமது தேசம் ஆளப்பட்டு வருகிறது. மேற்கண்ட அதிகாரிகளுக்கு உதவிக்காகப் பல உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். தேசத்தின் பல பிரிவுகளாவன:—அநேக குடும்பங்கள் சேர்ந்தது ஒரு பட்டி. அநேக பட்டிகள் சேர்ந்தது ஒரு கிராமம். அநேக கிராமங்கள் சேர்ந்தது ஒரு தாலூக்கா. அநேகதாலூக்காக்கள் சேர்ந்தது ஒரு ஜில்லா. அநேக ஜில்லாக்கள் சேர்ந்தது ஒரு இராஜதானி. அநேக இராஜதானிகளும், பல பெரும்பிரிவுகளும் சேர்ந்தது தேசம்.

14. நீர் நிலப்பிரிவுகள்

நாம் வசிக்கும் இப்பூமியில் பூபாகம் ஒரு பங்கும் ஜலபாகம் மூன்று பங்குமாக இருக்கின்றன.

மகாசமுத்திரம்:—பெரிய கண்மாய், ஏரி முதலிய நீர்பாகங்களைக்காட்டிலும் மிகவும் பெரிது கடல். கடலைக் காட்டிலும் மிகவும் பெரியதாயும், உப்பு நீருள்ளதாயுமிருக்கும் மிகப்பெரிய ஜலபாகத்திற்கு மகாசமுத்திரம் என்று பெயர். உதாரணம், நாம் வசிக்கும் இந்தியா தேசத்தின் தெற்கேயுள்ளது இந்துமகாசமுத்திரம்.

பள்ளத்தாக்கு
குன்று
சமுத்திரம்

கடல்:—மகா சமுத்திரத்தைக் காட்டிலும், சிறிய நீர் பாகத்திற்குக் கடல் என்று பெயர். உதாரணம்:- நாம் வசிக்கும் தேசத்தின் மேற்கிலுள்ள அராபிக்கடல்.

வளைகுடா:—பூபாகத்திற்குள் குறுக்கிச்செல்லும் சமுத்திரத்தின் நீர்பாகத்திற்கு வளைகுடா என்று பெயர். உதாரணம்:- இந்தியாவிற்கு வடமேற்கிலுள்ள அரேபியா தேசத்திற்கு கிழக்கிலுள்ள பாரஸீக வளைகுடா.

விரிகுடா:—விரிகுடா என்பது வளைகுடாவைப்போல் குறுகலாகயிராமல விரிவாகஇருக்கும். பூமிக்குள் விரிந்து செல்லும் நீர்ப்பாகத்திற்கு விரிகுடா என்று பெயர். உதாரணம்:- நாம் வசிக்கும் தேசத்திற்குக் கிழக்கிலுள்ள வங்காள விரிகுடா.

ஜலசந்தி:—இரண்டு பெரிய ஜலபாகங்களைச் சேர்க்கும் குறுகலான கடற்பிரிவுச்கு ஜலசந்தி என்று பெயர். உதாரணம்:- நாம் வசிக்கும் இந்தியாதேசத்திற்கும் இலங்கைத் தீவுக்கும் மத்தியிலுள்ள பாக்ஸ்ஜலசந்தி.

ஏரி:—நான்கு பக்கங்களிலும் தரையால் சூழ்ந்து மத்தியிலுள்ள ஜலபாகத்திற்கு ஏரி என்று பெயர். உதாரணம்:- மதுரைக்கு 2 மைல் தூரத்திலுள்ள மாடக்குளம் ஏரி.

குட்டை:—குட்டை என்பது ஒரு சிறிய ஏரி. பள்ளமுள்ள இடங்களில் ஜலம் வந்து நிரம்பி நிற்கும் ஜல பாகத்திற்குக் குட்டை என்று பெயர். இதை, நாம் வசிக்கும் இந்தியாவில் குளம் என்று சொல்லுகிறோம். உதாரணம்:- மதுரைக்குக் கிழக்கிலுள்ள வண்டியூர் குளம்.

நதி:—மழை ஜலத்தால் உண்டாகும் மிகச் சிறிய கால்வாய்கள் ஒன்ருய்ச் சேர்ந்து ஒருபெரிய கால்வாயாகிறது. இப்படிப் பலகால்வாய்கள் ஒன்றுசேர்ந்தது நதி. உயரமான மலைகளில் உற்பத்தியாகி பள்ளமான இடத்தை நோக்கிச்செல்லும் நீர்ப்பாகத்திற்கு நதி என்று பெயர். உதாரணம்:- இஜ்ஜில்லாவில் ஓடும் வைகைநதி.

உபநதி:— நதி ஓடும் வழியில், வேறு சில கால்வாய்கள் வந்து இந்நதியுடன் கலக்கும். அப்படிக் கலக்கும் கால்வாய்க்கு உபநதி என்று பெயர். உதாரணம்:- அமராவதி நதி.

கிளைநதி:—ஒரு நதியிலிருந்து பிரிந்து செல்லும் நதிக்குக் கிளைநதி என்று பெயர். உதாரணம்:- நமது ஜில்லாவில் ஓடும் வைகை நதியின் கிளையாகிய கிருதமாலை.

நீர்வீழ்ச்சி:—உயரத்திலிருந்து செங்குத்தாய் பள்ளமான பூமியில் விழும் நதிகளின் பாகத்திற்கு நீர் வீழ்ச்சி என்று பெயர். உதாரணம்:- காவேரி நீர் வீழ்ச்சி.

கண்டம்:—அநேக தேசங்கள் அடங்கிய, பெரிய நிலப்பிரிவுக்குக் கண்டம் என்றுபெயர். உதாரணம்:- நாம்வசிக்கும் ஆசியா கண்டம்.

தேசம்:—பல மாகாணங்கள் அடங்கிய நிலப்பிரிவுக்குத் தேசம் என்று பெயர். உதாரணம்:- நாம் வசிக்கும் இந்தியா தேசம்.

இராஜதானி:—அநேக ஜில்லாக்கள் சேர்ந்தது ஒருஇராஜதானி. உதாரணம்:- நாம் வசிக்கும் சென்னைஇராஜதானி.

ஜில்லா:—பல தாலூக்காக்கள் சேர்ந்தது ஒரு ஜில்லா. உதாரணம், நாம் வசிக்கும் மதுரை ஜில்லா.

தீபகற்பம்:—மூன்று பக்கங்களில் பெரும்பாலும் சமுத்திரத்தினுல் சூழப்பட்ட பூபாகத்துக்குத் தீபகற்பம் என்று பெயர். உதாரணம்:- நாம் வசிக்கும் இந்தியா.

தீவு:— நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட நிலப் பாகத்துக்குத் தீவு என்றுபெயர். உதாரணம்:- இராமேசுவரம்.

பூசந்தி:—இரண்டு பெரிய பூபாகங்கள் ஒன்று சேர்ந்து இரண்டு பெரிய ஜலபாகஙகளைப் பிரிக்கும் குறுகிய பூபாகத்துக்குப் பூசந்தி என்று பெயர். உதாரணம்:- வட அமெரிக்காவின் தென்கோடியிலுள்ள பனுமா பூசந்தி.

டெல்டா:—ஒரு நதி முடியுமிடத்தில் (முகத்துவாரம்) நதியினுல் கொண்டுவரப்பட்ட வண்டல் மண் படிந்த நிலத்திற்கு டெல்டா என்றுபெயர். உதாரணம்:-கங்காநதிடெல்டா.

முனை:—சமுத்திரத்திற்குள் குறுகிய வாயுடன் செல்லும் நிலப்பாகத்துக்கு முனை என்று பெயர். உதாரணம்:- நாம் வசிக்கும் தேசத்தின் தென்கோடியிலுள்ள கன்னிய குமரி முனை.

குன்று:—நிலத்தின் உயரமான பாகத்திற்குக் குன்று என்று பெயர். உதாரணம்:- பசு மலைக்குன்று.

மலை:—குன்றைக்காட்டிலும் அதிக உயரமாயிருக்கும் பாகத்திற்கு மலை என்றுபெயர். உதாரணம்:- இஜ்ஜில்லாவிலுள்ள பழநிமலை.

மலைத்தொடர்ச்சி:—மலைகள் வரிசையாய்த் தொடர்ந்திருந்தால், அவற்றிற்கு மலைத்தொடர்ச்சி என்று பெயர். உதாரணம்:- இஜ்ஜில்லாவின் மேற்கிலுள்ள மேற்குத்தொடர்ச்சி மலை.

பீடபூமி:—பூமியைவிட உயரமாயிருக்கும் மேட்டு நிலத்துக்குப் பீடபூமி என்று பெயர் உதாரணம்:- நாம் வசிக்கும் இந்தியாவிலுள்ள தக்ஷிண பீடபூமி.

பள்ளத்தாக்கு:—இரண்டு மலைகளுக்கும் மத்தியிலுள்ள பள்ளமான பூமிக்குப் பள்ளத்தாக்கு என்று பெயர் உதாரணம்:- பெரியகுளம் தாலூக்காவிலுள்ள கம்பம் பள்ளத்தாக்கு.

பாலைவனம்:—நீர் இல்லாமல் வறண்ட நிலபாகத்துக்குப் பாலைவனம் என்று பெயர். உதாரணம்:- இந்தியாவிலுள்ள தார் பாலைவனம்.

காடு:—பல செடி கொடிகள் அடர்ந்திருக்கும் நிலபாகத்துக்குக் காடு என்று பெயர். உதாரணம்:- மதுரைக்கு 12 மைல் தூரத்திலுள்ள அழகர்கோவில் காடு.

---

15. ஜில்லா

நாம் வசிக்கும் தேசம் இந்தியாவை பல பெரிய பிரிவு களாகப் பிரித்திருக்கிறார்கள். அவற்றில் நாமிருக்கும் பிரி வுக்கு சென்னை இராஜதானி என்று பெயர். இந்த இராஜ தானியை 26 ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவை யாவன:—

1. கஞ்சம்
2. விசாகபட்டணம்
3. கோதாவரி
4. கிருஷ்ணா
5. குண்டூர்
6. நெல்லூர்
7. சென்னபட்டணம்
8. செங்கற்பட்டு
9. தஞ்சாவூர்
10. திருச்சிராப்பள்ளி
11. மதுரை
12. இராமநாதபுரம்
13. திருநெல்வேலி
14. தென் ஆற்காடு
15. வட ஆற்காடு
16. சித்தூர்
17. சேலம்
18. கோயம்புத்தூர்
19. மலையாளம்
20. நீலகிரி
21. கர்நூல்
22. பல்லாரி
23. தென்கன்னடம்
24. கடப்பை
25. அனந்தபுரம்
26. அஞ்சங்கோ

———

16. இராமநாதபுரம் ஜில்லா

நாம் வசிக்கும் இராஜதானியிலுள்ள ஜில்லாக்கள் 26-ல் நாமிருக்கும் ஜில்லா இராமநாதபுரம். இஜ்ஜில்லாவைப்பற்றி பின்வரும் விஷயங்களால் அறியலாம்.

17. இருக்குமிடம் பரிமாணம்

1910-ம் வருஷத்தில் இஜ்ஜில்லாவைப் புதிதாய் ஏற்படுத்தினார்கள். 1910-ம் வருஷத்திற்குமுன் மதுரை ஜில்லாவோடு, இராமநாதபுரம், சிவகங்கை ஜமீன்களாகச் சேர்ந்திருந்தன. ஒரு படத்தின் எல்லைகளை அறியவேண்டுமானால், தலைப் பக்கம் வடக்கென்றும், அடிப்பக்கம் தெற்கென்றும், இடது கைப்பக்கம் கிழக்கென்றும், வலதுகைப்பக்கம் மேற்கென்றும் வைத்து அறிந்துகொள்ளவேண்டும். இஜ்ஜில்லாவின் வடக்கில் புதுக்கோட்டை ராஜ்யமும், தஞ்சாவூர் ஜில்லாவும், தெற்கே திருநெல்வேலி ஜில்லாவும், மன்னார்குடாக்கடலும், கிழக்கே வங்காளகுடாக்கடலும், மேற்கே மதுரை ஜில்லாவும், மேற்குத் தொடர்ச்சிமலையுமிருக்கின்றன. இஜ்ஜில்லாவின் விஸ்தீரணம் 4834 சதுரமைல் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். சதுர மைல் என்றால் என்ன? ஒரு இடத்தின் அளவு, நீளத்தில் மைலாகவும், அகலத்தின் அளவு மைலாகவும் இருந்தால், நீளத்தின் அளவையும், அகலத்தின் அளவையும் பெருக்கினால் வரும் விடை சதுரமைலாகும். இன்னும் பல இடங்களின் அளவு நீளத்திலும் அகலத்திலும் கஜம் அல்லது அடியாயிருந்தால், முன்போலவே நீளத்தையும் அகலத்தையும் பெருக்கி வரும் விடை சதுர கஜம் அல்லது சதுர அடி ஆகும்.


இராமநாதபுரம் ஜில்லா.
ஸ்கேல் 1 அங்குலம் = 24 மைல்,
தஞ்சாவூர்
புதுக்கோட்டை
திருச்சிராப்பள்ளி
மன்னார் குடா
திருநெல்வேலி

18. இயற்கை அமைப்பு

ஒவ்வொரு இடத்திலுமுள்ள மலைகள், குன்றுகள், நதிகள், ஏரிகள், சமவெளிகள் முதலியவைகள் இயற்கையாகவே உண்டாயிருக்கின்றன. நீங்கள் படத்தைப்பார்த்து, எந்தெந்த இடங்களில் மலைகளிருக்கின்றனவென்பதையும், மற்ற இடங்களிலுள்ள நிலம் எப்பேர்ப்பட்ட மண் உள்ளதென்றும், அவ்விடங்களில் நீர் வசதி உண்டா. அல்லது வறண்ட பூமியா, அல்லது பள்ளத்தாக்கான இடமா, என்று படத்தைப்பார்த்து அறியலாம். இராமநாதபுரம் ஜில்லாவை நமது இராஜாங்கத்தார் ஒன்பது பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகள் இராமநாதபுரம் தாலூக்கா, சிவகங்கை தாலூக்கா, திருப்பத்தூர் தாலூக்கா, பரமக்குடி தாலூக்கா, முதுகுளத்தூர் தாலூக்கா, அறுப்புக்கோட்டை தாலூக்கா, திருவாடானைத் தாலூக்கா, சாத்தூர் தாலூக்கா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்கா எனப்படும். இஜ்ஜில்லாவில் மேற்கே கொஞ்ச பாகம் தவிர மற்ற பாகங்களெல்லாம் சமவெளியாகவும், தென்கிழக்கே தாழ்ந்தும் இருக்கிறது. இஜ்ஜில்லாவில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்காவின் மேற்குப்பாகம் குன்றுகள் அடர்ந்தும், அறுப்புக்கோட்டை, சாத்தூர் தாலூக்காக்களில் அதிகபாகமும், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்காவில் கொஞ்ச பாகம் கரிசல் நிலமாகவுமிருக்கின்றன. வைகை நதிபாயுமிடங்களில் நீர்வளமுள்ளதாயிருக்கின்றன. இராமநாதபுரம், சிவகங்கை தாலூக்காக்களில் அநேகமாய் செவ்வல் நிலமாயிருக்கின்றன. இராமநாதபுரம், திருவாடானை, முதுகுளத்தூர் இவ்விடங்கள் மணற்பாங்கான இடமாயிருக்கின்றன.

19. மலைகளும் நதிகளும்

மலைகள்

சமவெளியைவிட தரையானது உயர்ந்து மேடாயிருந்தால் குன்று என்றும், குன்றைக்காட்டிலும் அதிக உயரமாயிருந்தால் மலை என்றும், இதற்குமுன்னால் படித்திருக்கிறோம். இஜ்ஜில்லாவின் மேற்கே மலைகளும், சில இடங்களில் சிறு குன்றுகளுமிருக்கின்றன. நாம் வசிக்கும் இஜ்ஜில்லாவின் மேற்கே யுள்ள மேற்குத் தொடர்ச்சிமலையின் கொஞ்சபாகமும் இஜ்ஜில்லாவிலுள்ள முக்கியகுன்றுகளாகிய பேய்மலைகள், கற்துளிமலை, கணவாய்மலை, திருவண்ணமலைகளுமிருக்கின்றன.

கணவாய்மலை:— கணவாய் என்பது உயரமான மலைகளுக்கு இடையிலுள்ள பாகம். ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வத்திராயிருப்புக்குப் போகும் வழியிலுள்ளது. இம்மலையில் விறகுக்கு உபயோகமாகக்கூடிய மரங்கள் வளர்கின்றன.

திருவண்ணமலை:— இம்மலையில் ஒரு சிறந்த விஷ்ணு கோவில் இருக்கிறது. இது ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வடக்கேயுள்ளது.

நதிகள்

வைகைநதி:— இஜ்ஜில்லாவில் ஓடும் நதிகளில் முக்கியமானது வைகை. இந்நதி இஜ்ஜில்லாவிலுள்ள நதிகளில் பெரியது. மதுரை ஜில்லாவின் மேற்கேயுள்ள பெரியகுளம் தாலூக்காவிற்குக் கிழக்கேயுள்ள வருஷநாடு, ஆண்டிப்பட்டி

மலைகளில் உற்பத்தியாகி பிறகு இந்நதி கிழக்கே திரும்பி நிலக்கோட்டைத் தாலூக்கா, மதுரைத் தாலூக்காக்களில் பிரவேசித்துப் பிறகு நமது ஜில்லாவில் சென்று, சிவகங்கை, பரமக்குடி, இராமநாதபுரம் தாலூக்காக்களின் வழியாகப் போய் ஆற்றங்கரை என்ற கிராமத்திற்கருகில் கடலில் சங்கம மாகின்றது. இந்நதியில் மழைகாலத்தில் தண்ணீர் வேக மாய்ச் செல்லுவதால், இந்நதிக்கு வேகநதி என்று மறுபெய ராயிற்று. மதுரையில் மீனாக்ஷி அம்மனுக்கும், சொக்கருக்கும் கல்யாணம் நடக்கும்போது, சோமசுந்தரக்கடவுளுடன் வந்த குண்டோதரனது வேண்டுகோளின்படி, அவனதுதாகத்தைத் தீர்ப்பதற்காக குண்டோதரனது கையைக் கடவுள்சொக்க நாதர் வைகை என்று சொல்ல, குண்டோதரன் கைவைய வைத்ததால், இந்நதி உண்டான காரணத்தால் இந்நதிக்கு வைகை என்று பெயரானதென்பர். இந்நதியின் உபநதிகள் சுருளிநதி, வராகநதி, மஞ்சள்நதி. முக்கிய கிளைநதி கிருதமாலை.

குண்டாறு:—மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தி யாகி, நமது ஜில்லாவிற்கு வருகிறது. நமது ஜில்லாவிலுள்ள அறுப்புக்கோட்டை, முதுகுளத்தூர், தாலூக்காக்களின் வழி யாய்ப் பிரவேசித்து, கிழக்கரை கிராமத்திற்குச் சமீபத்தில் மன்னார் குடாக்கடலில் விழுகிறது. இந்நதிக்குக் கமுதி என்னுமிடத்தில் மண்ணினால் ஓர் அணை கட்டப்பட்டிருக் கிறது. இந்த நதியிலிருந்து, இவ்விடத்தில் ஒரு கால்வாய் புறப்பட்டு, முதுகுளத்தூரிலுள்ள சில இடங்களுக்குத் தண்ணீர் பாய்கிறது.

வரிசிலே ஆறு;— இந்நதி மதுரை ஜில்லாவிலுள்ள மலைகளில் உற்பத்தியாகி, நமது ஜில்லாவில் வடமேற்கே ஓடி, தென்கிழக்கே திரும்பிப் பல கிளைகளாகப் பிரிந்து கடலில் விழுகிறது.

வைப்பாறு:— இந்நதி மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலூக்காக்களில் பிரவேசித்து திருநெல்வேலி ஜில்லாவின் வழியாய்ச் சென்று, பின் கடலில் விழுகிறது. இந்நதியின்மேலுள்ள பட்டணம் சாத்தூர்.

திருமணிமுத்தாறு:— இது ஒரு சிறிய நதி. இந்நதி மதுரை ஜில்லாவிலுள்ள மலைகளில் உற்பத்தியாகி, சிவகங்கை, இராமநாதபுரம் ஜமீன்கள் வழியாக ஓடிக் கடலில் விழுகிறது.

அர்ச்சுன நதி:— இந்நதியை வேப்பிலைப்பட்டி ஆறு என்று கூறுவார். இந்நதி மேற்கிலுள்ள மலையில் உற்பத்தியாகி, காளையார் குறிச்சி என்னுமிடத்தில் தாழை ஊற்று, வடுகபட்டி ஆறு இவைகளைச் சேர்த்துக்கொண்டு, வெகுதூரம் சென்று வைப்பாற்றில் கலக்கிறது.

இது தவிர வேறு சிறு நதிகளுமுண்டு. அவையாவன:— பாலாறு, வெள்ளாறு.

20. ஏரிகள்

நமது ஜில்லாவில் நீர்வளம் அதிகமாக இல்லை. ஏனென்றால், தண்ணீர் எப்போதும் ஓடக்கூடிய நதிகள் இல்லை. வைகைநதி, வைப்பாறு, அர்ச்சுன நதி, இந்நதிகளால் சில இடங்களுக்குத் தண்ணீர் பாய்கிறது. இஜ்ஜில்லாவில் நல்ல

தண்ணீருள்ள ஏரிகள் அநேகம் உண்டு. ஏரிகளைக் குளங்கள் என்றும் சொல்வர். குளங்களில் இரண்டுவகை உண்டு. 1. கால்வரத்துக்குளங்கள் 2. வானமாரிக்குளங்கள். நதிகளில்வரும் தண்ணீரை, வாய்க்கால்களின் வழியாகக்கொண்டு வந்து, அத்தண்ணீரைக்கட்டி நிறுத்தும் குளங்களுக்குக் கால்வரத்துக்குளங்களென்றும், மழைத்தண்ணீரால் நிரம்பும் குளங்களுக்கு வானமாரிக்குளங்களென்றும்பெயர்.

நமது ஜில்லாவிலுள்ள முக்கிய ஏரிகளாவன;—

1. இராஜசிங்கமங்கல ஏரி:—திருவாடாணைத் தாலூக்காவில் இருக்கிறது. நமது ஜில்லாவிலுள்ள ஏரிகளிற் பெரியது இதுவே.

2. கோபால சமுத்திரம்:—இது ஒரு பெரிய கண்மாய். வத்ராயிருப்புப் பெரிய கண்மாய்க்குக் கிழக்கேயுள்ளது.

3. வத்ராயிருப்புப் பெரிய கண்மாய்:— இக்கண்மாயின் ஜலம் பல நிலங்களுக்குப் பாய்ச்ச அநுகூலப்படுகிறது. இக்கண்மாய் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்காவிலிருக்கிறது. இத்தாலூக்காவின் எந்தத்திசையில் இக்கண்மாய் இருக்கிறதென்று படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்?

21. சீதோஷ்ணஸ்திதி

ஒரு இடத்தின் நிலைமையை அறியவேண்டுமானால் அவ்விடம் உஷ்ணமாயிருக்கிறதா, அல்லது குளிர்ச்சியாயிருக்கிறதா, என்பதைத் தெரிந்து கொள்வதுதான் சீதோஷ்ணஸ்திதி. சீதோஷ்ணஸ்திதியின் அர்த்தம் என்னவென்றால்

சீதம்— குளிர்ச்சி, உஷ்ணம்—சூடு, ஸ்திதி—நிலைமை. ஓரிடத்திலுள்ள ஜனங்களின் நடையுடைபாவனைகளும் ஜீவ வர்க்கம், விருட்ச வர்க்கம் முதலியவைகளும் சீதோஷ்ண ஸ்திதியைப்பற்றினவையாயிருக்கின்றன. நாம் வசிக்கும் இஜ்ஜில்லாவானது. பொதுவாக உஷ்ணமான பிரதேசமாயிருக்கிறது. இஜ்ஜில்லாவில், பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் உஷ்ணம் அதிகம். நமது ஜில்லாவில் கடலுக்குச் சமீபமாயுள்ள இடங்களில் மட்டும் குளிர்ச்சியாயிருக்கிறது. அற்பசி, கார்த்திகை, மார்கழி இம்மாதங்களில் இங்கு கால மழை பெய்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்காவில் மட்டும் அதிக மழை பெய்கிறது. நமது ஜில்லாவில், தென்மேற்குப் பருவக்காற்று அடிப்பதால் ஆடி, ஆவணி மாதங்களில் உஷ்ணம் கொஞ்சம் குறைவாயிருக்கிறது. இஜ்ஜில்லாவில் வருஷத்தில் சராசரி 29 அங்குலம் மழை பெய்கிறது.

22. விளை பொருள்கள்

மூலவர்க்கம்:—நமது ஜில்லாவில் நன்செய்ப் பயிர்கள் விளைவு குறைவு. புன்செய்ப் பயிர்கள் விளைவு அதிகம். ஏனென்றால், சதாகாலமும் தண்ணீர் ஓடும் நதிகள் இல்லாததால், நன்செய்ப் பயிர்கள் அதிகம் விளைவதற்கு ஏதுவில்லாமலிருக்கிறது. வைகைநதி பாயுமிடங்களில்மட்டும் அதன் தண்ணீரை நன்செய்ப் பயிர்களைப் பயிர் செய்வதற்கு உபயோகிக்கிறார்கள். முதுகுளத்தூர், சிவகங்கை, பரமக்குடி இத்தாலூக்காக்களில் நெல் விளைகிறது. சோளம், நிலக்கடலை இவைகள், அறப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், சிவகங்கை, திருப்பத்தூர் தாலூக்காக்களிலும், சாத்தூர், முதுகுளத்தூர், அறப்புக்கோட்டை, திருப்பத்தூர் தாலூக்

காக்களில் பருத்தியும் விளைகின்றன. இராமநாதபுரம், பரமக்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர் இவ்விடங்களில் கொஞ்சம் எள் விளைகிறது. சில இடங்களில், மிளகாயும், வாழையும், காய்கறிகளும் பயிரிடுகிறார்கள்.

உலோகங்கள்:— நமது ஜில்லாவில் முக்கியமான உலோகங்கள் உண்டாகவில்லை. அறுப்புக்கோட்டையில் சிவப்புக்கற்களும், திருப்பத்தூர் தாலூக்காவில் பாறைக் கற்களும், கடலுக்கருகிலுள்ள இடங்களில் உப்புமண்ணும், சுண்ணாம்புக் கற்களும் கிடைக்கின்றன.

மிருக இனம், பறவை இனம்:—ஓநாய், நரி, சிறுத்தைப் புலியும், ஆடு, மாடு, குதிரை, பசு, நாய், எருமை முதலிய வீட்டுப் பிராணிகளும் உண்டு. மற்ற ஜில்லாக்களில் இருப்பதைப்போலவே, நமது ஜில்லாவிலும், கோழி, வாத்து, கிளி, மைனா, புரு, குருவி, காகம், கொக்கு, காடை, கழுகு, பருந்து, முதலிய பக்ஷிகளும் உண்டு. கடலோரங்களில் ஓர் வித கறுப்பு மான்கள் வசிக்கின்றன. நமது ஜில்லாவில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்காவிலுள்ள ராஜபாளையத்தில் இருக்கும் நாய் இனம் விசேஷமானது. பலர் இந்நாய்களை வேட்டைக்குப் பழக்குகிறார்கள்.

23. கைத்தொழில், ஏற்றுமதி, இறக்குமதி

நமது ஜில்லாவில் நடக்கும் தொழில்களில் முதன்மையானது விவசாயத் தொழில். மேலும் நமது ஜில்லாவில், சாயம் போடுதலும், துணி நெய்தலும் விசேஷமாய் நடக்கின்றன. அறுப்புக்கோட்டையில் மட்டமான துணிகளும்,

பரமக்குடியில் நயமான துண்டுகளும், ஜரிகை வேஷ்டிகளும், சாயவேஷ்டிகளும் செய்யப்படுகின்றன. இராமநாதபுரத்தில், பனையோலையால் பெட்டிகளும், பாய்களும் செய்கிறார்கள். கடலோரமாயுள்ள ஊர்களில், ஜனங்கள் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்கிறார்கள். மற்ற ஜில்லாக்களைப்போல், நமது ஜில்லாவிலும் சில இடங்களில், ஆடு மாடு மேய்த்தல், தச்சு, கொல், தட்டான் வேலைகளும் நடைபெறுகின்றன. மானாமதுரையில் மண் பாத்திரங்களும், வெண்கலப் பாத்திரங்களும் செய்கிறார்கள். ஸ்ரீவில்லிபுததூரில் ஓடுகள் செய்கிறார்கள். திருப்பத்தூரில் பித்தளைப் பாத்திரங்கள் விசேஷம்.

நமது ஜில்லாவில் இன்னும் கள் இறக்குதல், கயிறு திரித்தல் தொழில்களும் நடக்கின்றன.

நமது ஜில்லாவிலிருந்து பருத்தி, மிளகாய்வற்றல், ஏலக்காய், காப்பிக்கொட்டை ஏற்றுமதியாகின்றன. இரும்புச்சாமான்கள், மண்எண்ணெய், தீப்பெட்டி, கண்ணாடிச் சாமான்கள், காகிதங்கள், சீமைத்துணிகள் இயந்திரங்கள் முதலியவைகள் இதர நாடுகளிலிருந்து வரவழைக்கப் படுகின்றன. இவ்விதம் மற்றநாடுகளிலிருந்துவரவழைப்பதற்கு இறக்குமதி என்றும், ஓர் ஊரிலிருந்து மற்ற ஊர்களுக்குச் சாமான்களை அனுப்புவதற்கு ஏற்றுமதி என்றும் பெயர்.

---

24. போக்குவரவுக்குரிய மார்க்கங்கள்

ஜனங்களுக்குப் போக்குவரவு செய்ய சௌகரியமாய் இருப்புப்பாதைகளும், வண்டிப்பாதைகளும் போடப்பட்டிருக்கின்றன. மதுரையிலிருந்து இராமநாதபுரத்துக்கும், மதுரையிலிருந்து திருமங்கலம், நத்தம்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையத்திற்கும், ராஜபாளையத்தின் வழியாகத்

11.2.1196

தென்காசிக்கும், மதுரையிலிருந்து விருதுநகர், சாத்தூர் வழியாகத் திருநெல்வேலிக்கும், மதுரையிலிருந்து காரியா பட்டி வழியாக அறுப்புக்கோட்டைக்கும், மேலூரிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர், திருப்பூவனத்திற்கும், திண்டுக் கல்லிலிருந்து திருப்பத்தூர் வழியாகத் தேவகோட்டைக்கும் மதுரையிலிருந்து சிவகங்கை, திருவாடானை வழியாக, தொண்டிக்கும், சாத்தூரிலிருந்து சிவகாசி வழியாக ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் வண்டிப்பாதைகள் போகின்றன. மதுரையிலிருந்து அறுப்புக்கோட்டைக்கும், தேவ கோட்டைக்கும், சிவகங்கைக்கும், தொண்டிக்கும், சாத்தூரி லிருந்து சிவகாசி வழியாய் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும், வண்டிப் பாதை வழியாக மோட்டார்கள் போகின்றன.

இருப்புப்பாதை:— நமது ஜில்லாவிற்கு வடக்கிலுள்ள சென்னப்பட்டணத்திலிருந்து தென் இந்திய இருப்புப்பாதை (S. I R.) நமது ஜில்லாவின் வழியாய்ப் போகிறது. மண்டபத்திற்கும், பாம்பனுக்கும் மத்தியிலுள்ள பாம்பன் கால்வாயில் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. பாலம் கட்டினதி லிருந்து, சென்னையிலிருந்து தனுஷ்கோடிக்குப் போகும் இருப்புப்பாதை புகைவண்டிகள் இப்பாலத்தின் வழியாய்ப் போகின்றன. பாலம் கட்டுவதற்குமுன், இக்கால்வாயைக் கடக்கக் கப்பல்கள், படகுகள் மூலமாகப் போய்க்கொண் டிருந்தார்கள். தற்போது அவ்விதமில்லாமல், புகை வண்டிகள் மூலமாகத் தனுஷ்கோடிக்குப்போய், அங்கிருந்து கப்பலேறி இலங்கைத் தீவிற்குப் போகிறார்கள். பாம்பன் கால்வாயில் கட்டப்பட்டிருக்கும் பாலமானது, புகைவண்டி கள் போவதற்கும், கப்பல்கள், படகுகள் போக, விரிந்து இடங்கொடுக்கும்படிக்கும் கட்டப்பட்டிருக்கும் பாலத்தின் படத்தைப்பாருங்கள்.



பாம்பன் பாலம்

மதுரைக்கும் தனுஷ்கோடிக்கும் மத்தியிலுள்ள நமது ஜில்லாவிற்குட்பட்ட ஸ்டேஷன்கள்:— சிலைமான், திருப்பூவனம், திருப்பாச்சேத்தி, முத்தனேந்தல், மானமதுரை, பார்த்திபனூர், சமுதக்குடி, பரமக்குடி, பாண்டிக்கண்மாய், சத்திரக்குடி, இராமநாதபுரம், வாலந்தரவை, உச்சிப்புளி, மண்டபம், பாம்பன், இராமேசுவரம், கோதண்டராமன் கோவில், தனுஷ்கோடி என்பன.

மதுரைக்கும் தூத்துக்குடிக்கும் மத்தியிலுள்ள நமது ஜில்லாவிற்குட்பட்ட ஸ்டேஷன்கள்:— விருதுநகர், சூலக்கரை, துலுக்கப்பட்டி, வேப்பிலைப்பட்டிசத்திரம், சாத்தூர், நள்ளி என்பன.

இப்பொழுது திருச்சிராப்பள்ளி ஜங்ஷனிலிருந்து புதிதாக உண்டாகியிருக்கிற ஒரு கிளை இருப்புப்பாதை புதுக்கோட்டைராஜ்யம் வழியாகவும் நமது ஜில்லாவிலுள்ள தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை வழியாகவும் மானமதுரை ஜங்ஷனில்சேர்ந்து தனுஷ்கோடிக்குப் போகின்றது.

விருதுநகர் ஜங்ஷனிலிருந்துஒரு கிளை இருப்புப்பாதை தென்காசிக்குப் போகிறது. போகும் வழியில் நமது ஜில்லாவிற்குட்பட்ட ஸ்டேஷன்கள்:- விருதுநகர், சங்கரலிங்கபுரம், சிவகாசி, இராமகிருஷ்ணபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் என்பன.

துறைமுகப்பட்டணங்கள்:— பாம்பன் கால்வாய். இது ஒரு துறைமுகப்பட்டணம். இது இராமேஸ்வரத்திற்குச் சமீபத்திலுள்ளது. இக்கால்வாயின்மேல் பாலம்கட்டி இருப்

புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இத்துறைமுகப்பட்டணத்தில் ஏராளமான சாமான்கள் ஏற்றுமதி, இறக்குமதியாகின்றன. இதைத்தவிர நமது ஜில்லாவில் கீழக்கரை, தேவிபட்டணம், தொண்டி என்ற துறைமுகப்பட்டணங்களுமுண்டு.

25. ஜனங்கள், மதங்கள், பாஷைகள்

ஜன நெருக்கமுள்ளதெனவும், ஜன நெருக்கமில்லாதெனவும் இருவகையாய்ப் பிரிக்கலாம். அதில் ஜன நெருக்கமுள்ள தாலூக்கா சாத்தூர்; ஜன நெருக்கமில்லாத தாலூக்கா சிவகங்கை. பிள்ளைகளே, நீங்கள் 1921-ம் வருஷம் சிலர் ஒவ்வொரு வீடுகளிலும் வந்து, வீட்டில் எத்தனை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று கேட்டு, அவர்கள் கொண்டு வந்த புஸ்தகங்களில் குறித்துக்கொண்டுபோனதைக் கேட்டிருப்பீர்கள். அவ்வருஷத்தில் சென்ஸஸ் கணக்குப்படி 17,21,837 ஜனங்கள் வசிக்கிறார்களென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதன்படி நமது ஜில்லாவில் ஒரு சதுர மைலுக்கு சராசரி 350 பேர்கள் வசிக்கிறார்கள். நமது ஜில்லாவில் இராமநாதபுரம், சிவகங்கை இஜ்ஜமீன்களில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் என்ற நகரத்தார்கள் மிகுதியாய் வசிக்கிறார்கள். இவர்கள் கொடுக்கல் வாங்கலில் தேர்ச்சி பெற்றவர்கள். நாடார், மறவர் (தேவர்) என்ற ஜாதியார்களும் நமது ஜில்லாவில் அதிகம். மேலும், இஜ்ஜில்லாவில் முதுகுளத்தூரில் மகம்மதியர்கள் அதிகமாகவும், ராஜபாளையத்தில் ராஜாக்களென்ற ஜாதியாரும், வேறு, சிற்சில இடங்களில் கள்ளர்களும், கிரிஸ்தவர்களும் வசிக்கிறார்கள்.

மதங்கள்:– இஜ்ஜில்லாவில், இந்துக்கள், முகம்மதியர்கள், கிரிஸ்துவர்கள் என்ற இம்மூன்று மதஸ்தர்களும் இருக்கிறார்கள். இதில் இந்து மதஸ்தர்கள் அதிகமாகவும் முகம்மதிய மதஸ்தர்களும், கிரிஸ்து மதஸ்தர்களும் குறைவாகவுமிருக்கிறார்கள். திருவாடாணைத் தாலூக்காவிலும், சிவகங்கை, பரமக்குடியிலும், கிரிஸ்துவர்களும், முதுகுளத்தூரிலும், இராமநாதபுரம் தாலூக்காவிலும் முகம்மதியர்களும் விசேஷமாக வசிக்கிறார்கள்.

பாஷைகள்:—இஜ்ஜில்லாவில் அதிகமாய் வழங்கும் பாஷை தமிழ். மற்றபாஷைகளும் சிறிதுபேசப்படுகின்றன. நமது ஜில்லாவிலும் ஆங்கிலபாஷையும் கற்கப்பட்டு வருகின்றது. நமது ஜில்லாவில், ஜில்லாபோர்டாராலும், ஜமீன்தார்களாலும், நாடார்களாலும், பாதிரிமார்களாலும், நாட்டுக்கோட்டை செட்டியார்களாலும், பொதுஜனங்களாலும், பள்ளிக்கூடங்கள் வைத்து படிப்பு விருத்தியாகிக்கொண்டு வருகின்றன.

26. தாலூக்காக்களும் அதன் பட்டணங்களும்

(சிவகாசி டிவிஷன்)

1. சாத்தூர் தாலூக்கா

எல்லைகள்:—படத்தைப்பார்த்து இத்தாலூக்காவின் எல்லைகளைச்சொல்லுக.

சாத்தூர்:— இத்தாலூக்காவின் முக்கியப்பட்டணம் இதுவே. இதுஒரு ரயில்வேஸ்டேஷன் இப்பட்டணம் வைப்பாற்றின் கரையிலுள்ளது. இவ்வூரில் ஆரியவைசிய ஹைஸ்கூலும், எட்வர்ட் ஹைஸ்கூலும், ஒரு பஞ்சுயந்திரசாலையுமிருக்கின்றன.

சிவகாசி:—இவ்வூர் இத்தாலூக்காவிலுள்ள பட்டணங்களில் பெரியது. இது சாத்தூருக்கு மேற்கே 12 மைல் தூரத்திலுள்ள முனிஸிபல்பட்டணம். இங்கு, பருத்தி, புகையிலை, முதலியவைகள் நடக்கும் ஒரு பெரிய வியாபாரஸ்தலம். இங்கு நாடார்கள் அதிகம். இவ்வூரில் இந்து நாடார்களுடைய விக்டோரியா ஹைஸ்கூல் ஒன்று இருக்கிறது. இதுஒரு ரயில்வேஸ்டேஷன்.

விருதுநகர்:— இது ஒரு முனிஸிபல் பட்டணம். நமது ஜில்லாவிலுள்ள வியாபாரஸ்தலங்களில் பெரியபட்டணம் இதுவே. இது ஒரு ரயில்வே ஜங்ஷன். இப்பட்டணத்தில் நாடார்கள் அதிகம். அவர்களால் ஹைஸ்கூல் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. அப்பாடசாலையில் வசிக்கும் மாணவர்களுக்கு இலவசமாகக்கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். அப்பாடசாலையின் பெயர் க்ஷத்திரிய வித்தியாசாலை. இங்கு பஞ்சுயந்திரசாலைகளுமுண்டு.

முத்துராமன்பட்டி:— இதுஒரு கிராமம். இங்குள்ளவர்கள் நெசவுத்தொழில் செய்கிறார்கள்.

திருத்தங்கால்:— இதுஒரு விஷ்ணுஸ்தலம். இவ்வூர் சாத்தூருக்கு வடமேற்கிலுள்ளது.

நள்ளி:— இதுஒரு ஜமீன் கிராமம். நமது ஜில்லாவின் எல்லைக்குள்பட்ட தூத்துக்குடி மார்க்கத்தில் தென்னிந்திய இருப்புப்பாதை ஸ்டேஷன்களில் கடைசி இதுவே.

II. ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூக்கா

நமது ஜில்லாவிலுள்ள தாலூக்காக்களில் செழிப்புள்ளது இதுவே.



ஸ்ரீவில்லிபுத்தூர்

எல்லைகள்:— வடக்கே மதுரை ஜில்லாவும் தெற்கே திருநெல்வேலி ஜில்லாவும், மேற்கே திருவாங்கூர் ராஜ்ஜியமும் கிழக்கே சாத்தூர் தாலூக்காவுமிருக்கின்றன.

ஸ்ரீ வில்லிபுத்தூர்:— இத்தாலூக்காவின் முக்கிய பட்டணம் இதுவே. இதுஒரு முனிஸிபல் பட்டணம். இதுஒரு ரயில்வே ஸ்டேட்ஷன். இது ஒரு புண்ணிய விஷ்ணுக்ஷேத்திரம். பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவராகிய பெரிய ஆழ்வாருடைய அபிமானபுத்திரி ஆண்டாளம்மன் கோவில் ஒன்று இருக்கிறது. இக்கோவிலில் ஆடி, மார்கழி மாதங்களில் சிறந்த உத்ஸவம் நடக்கிறது. அவ்வுத்ஸவத்திற்கு பலவிடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வருகிறார்கள். இவ்வூரில் இந்து ஹைஸ்கூலும், ஸி. எம். எஸ். ஹைஸ்கூலும், உபாத்திமைத்தொழில் பயிற்றுவிக்கும் ஸ்கூலும், முனிசீப் கச்சேரியும், ஒரு தாலூகாபோர்டு ஆபீஸும் ஒருபெரிய தெப்பக்குளமுமிருக்கின்றன.

வத்ராயிருப்பு:— இவ்வூரில் நெல்விளைவு அதிகம். இங்கு நெசவுத்தொழில் நடக்கிறது. இது ஒரு யூனியன் பட்டணம். இவ்வூரில் இந்து ஹைஸ்கூலும், சப்ரிஜிஸ்தர் ஆபீஸுமிருக்கின்றன. இவ்வூரிலிருந்து பெரியாற்று அணைக்கட்டுக்கு ஒருபாதை போகிறது.

இராஜபாளையம்:— இது ஒரு ரயில்வேஸ்டேஷன். இவ்வூர் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத்தெற்கே 7 மைல் தூரத்திலுள்ளது. இவ்வூர்உயர்ந்தஜாதி நாய்களுக்குப்பெயர்பெற்றது. இங்கு ராஜாக்கள் என்ற ஜாதியார் அதிகம். இந்தஊரில் A. V. செக்கெண்டரி ஸ்கூலும், 'ஒரு போர்டு ஹைஸ்கூலுமிருக்கின்றன.

ஜமீன் கிராமங்கள்:—கொல்லன் கொண்டான், சேற்றூர்.

(தேவகோட்டை டிவிஷன்)

III. சிவகங்கை தாலூக்கா

எல்லைகள்:— வடக்கே திருப்பத்தூர் தாலூக்காவும் தெற்கே இராமநாதபுரம் தாலூக்காவும், மேற்கே மதுரை ஜில்லாவும், கிழக்கே திருவாடானைத் தாலூக்காவு மிருக்கின்றன.

சிவகங்கை:— இது இந்தத்தாலூக்காவின் முக்கியப் பட்டணம். இவ்வூரில் ஜமீன்தாரால் கட்டப்பட்ட அழகான அரண்மனை ஒன்றுண்டு. இவ்வூருக்கு மதுரையிலிருந்தும், மானமதுரை ஸ்டேஷனிலிருந்தும் வண்டிப்பாதை வழியாக மோட்டார்கள் போகின்றன. இவ்வூரில்விசித்திரமானபித்தளைச் சாமான்கள் செய்யப்படுகின்றன. இங்கு ராஜா ஹைஸ்கூல் ஒன்று யிருக்கிறது. இன்னும், இவ்வூரில் ஜில்லாமுனிசீபு கச்சேரியும், ஒருதாலூகா போர்டு ஆபீஸும், சப்ரிஜிஸ்தர் கச்சேரியும், டிப்டிதாசில்தார் கச்சேரியு மிருக்கின்றன.

மானமதுரை:— இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இது வைகையாற்றின் கரையிலுள்ளது. இவ்வூரில் வண்டிகள் போவதற்குச் சௌகரியமாக, வைகையாற்றில் பாலம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இங்குள்ள விஷ்ணு கோவில் மிகவும் பிரசித்திப்பெற்றது. இவ்வூருக்கு மறுபெயர் வானர வீர மதுரை. ஹனுமார் சீதையைக்கண்டு பிடித்து வந்ததற்கு ராமர் இந்த இடத்தில் சேனாதிபதி வேலையைக்கொடுத்த

இடமிதுவானதால், இவ்விடத்திற்கு இப்பெயர் வந்தது. இவ்வூரில் மண்பாத்திரங்களும், வெண்கலப் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. இங்கு சப்ரிஜிஸ்தர் ஆபீஸும், முனிசீபு கச்சேரியும் குஷ்டரோகங்களை நீக்க ஆஸ்பத்திரியும், ஒ. வி. ஹைஸ்கூலுமிருக்கின்றன. இங்குவியாழக்கிழமை தோறும் சந்தை கூடுகிறது.

திருப்புவனம்:— இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். வைகையாற்றின் தென்கரையிலிருக்கிறது. இங்குள்ள சிவன் கோவில் பிரசித்திப்பெற்றது. இக்கோவிலில் பங்குனி மாதங்கள் தோறும் உற்சவம் நடக்கிறது. இவ்வூரில், தென்னை, வாழை, வெற்றிலை விசேஷமாய் உண்டாகின்றன. இங்கு ஆஸ்பத்திரியும், சப்ரிஜிஸ்தர் கச்சேரியும், போர்டு பாடசாலையுமிருக்கின்றன. இவ்வூரில் செவ்வாய்க்கிழமைகள் தோறும் சந்தை கூடுகிறது.

காளையார்கோவில்:— இவ்வூர் சிவகங்கைக்குக் கிழக்கே 10மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இங்கு வைகாசி மாதத்தில் நடக்கும் திருவிழாவிற்கு பலவிடங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் வருகிறார்கள்.

திருப்பாச்சேத்தி:—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இவ்வூரில் புதன்கிழமைகள் தோறும் சந்தை கூடுகின்றன. இங்கு ஒரு பிராஞ்சு போஸ்டாபீஸ் உண்டு.

நாட்டரசன் கோட்டை:—இவ்வூரில் இராமாயணத்தைத் தமிழில் இயற்றிய கம்பர் சமாதியும், கண்ணுத்தாள் கோவிலும் இருக்கின்றன.

மணலூர்:— இவ்வூர் திருப்புவனத்திற்கு மேற்கே 4மைல் தூரத்திலுள்ளது. இது வைகையாற்றின் கரையி லுள்ளது. இவ்வூர் முன்காலத்தில் பாண்டிய இராஜதானியின் தலைநகராயிருந்தது. இவ்வூரில் தென்னைகள் விசேஷ மாய் வளர்கின்றன. இங்கு ஒரு பிராஞ்சு போஸ்டாபீஸ் உண்டு. இவ்வூரில் எலிமெண்டரி பாடசாலை ஒன்றுண்டு. வேம்பத்தூர், இடைக்காட்டூர், இவ்வூர்கள் இத்தாலூக்கா விலுள்ள மற்ற முக்கிய ஊர்கள்.

IV. திருப்பத்தூர் தாலூக்கா

எல்லைகள்:— படத்தைப்பார்த்து இத்தாலூக்காவின் எல்லைகளைச்சொல்லுக.

திருப்பத்தூர்:—இது ஒரு வியாபாரஸ்தலம். இவ்வூரில் ஒரு செக்கேண்டரிபாடசாலையும், சப்ரிஜிஸ்தர் கச்சேரியும், லூதர் மிஷன் கண்வைத்தியசாலையும், இன்னும் மற்றகச்சேரி களுமிருக்கின்றன. இவ்வூரில் சீதாதேவி என்ற ஒருபெரிய தெப்பக்குளம் இருக்கிறது. இங்கு சனிக்கிழமைகள் தோறும் சந்தைகூடுகிறது.

குன்றைக்குடி:—இதுஒரு சிறந்த சுப்பிரமணியர் ஸ்தலம் இங்கு நடக்கும் பங்குனி உத்திரத்திருவிழாவிற்கு பலவிடங் களிலிருந்தும், ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து போகிறார்கள்.

காரைக்குடி:— இவ்வூர், நாட்டுக்கோட்டை செட்டியார் களுடைய நகரங்களில் முக்கியமானவைகளில் ஒன்று. நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் தருமங்கள் செய்வதிலும்,

சுத்திரங்கள், கோவில்கள், பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு அதிக பணங்களைச்செலவு செய்வதிலும் ஊக்கமுள்ளவர் களாயிருக்கிறார்கள். இந்த ஸ்ரீ மீனாக்ஷி வித்தியாசாலா ஹைஸ்கூல் ஒன்றுஇருக்கிறது. இங்குதிங்கள்கிழமைதோறும் சந்தைகூடுகிறது.

திருக்கோஷ்டியூர்:—இவ்வூர் திருப்பத்தூருக்குச் சமீபத் திலுள்ளது. இது ஒரு சிறந்தவிஷ்ணுஸ்தலம். இந்தஸ்தலத் தில் மாசிமாதங்கள்தோறும் நடக்கும் தெப்ப உற்சவத்திற்குச் சுற்றுப்பக்கங்களிலிருந்து ஜனங்கள் வந்து போகிறார்கள்.

V. திருவாடானைத் தாலூக்கா

எல்லைகள்:—வடக்கே தஞ்சாவூரும், புதுக்கோட்டை யும், தெற்கே பரமக்குடி தாலூக்காவும், இராமநாதபுரம் தாலூக்காவும், மேற்கே சிவகங்கை ஜமீனும், கிழக்கே பாக்ஸ் ஜலசந்தியுமிருக்கின்றன.

திருவாடானை:—இத்தாலூக்காவின் முக்கிய பட்டணம் இதுவே. இது ஒரு சிவஸ்தலம்.

தேவகோட்டை:—இவ்வூர், நாட்டுக்கோட்டை செட்டி யார்களின் சிறந்த நகரம். இவர்களால் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்கள் அழகாகவும், அதிக செலவுசெய்தும் இவ்வூரில் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கு நகரத்தார் மீனாக்ஷி ஹைஸ்கூல் ஒன்றுண்டு. இங்குவெள்ளிக்கிழமைகள் தோறும் சந்தை கூடுகிறது.

(இராமநாதபுரம் டிவிஷன்)

VI. இராமநாதபுரம் தாலூக்கா

எல்லைகள்:—வடக்கே திருவாடானை தாலூக்காவும், தெற்கே மன்னார் வளைகுடாவும், மேற்கே பரமக்குடி, முதுகுளத்தூர் தாலூக்காக்களும், கிழக்கே பாம்பன் கால்வாயும் இராமேஸ்வரம் தீவுமிருக்கின்றன.

இராமநாதபுரம்:— இது இத்தாலூக்காவின் முக்கிய பட்டணம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இவ்வூரில் ராஜாவினுடைய ஹைஸ்கூலும், மிஷன் ஸ்வார்ட்ஸ் ஹைஸ்கூலும் இருக்கின்றன. இவ்வூரின்வழியாக தேவிபட்டணம், தர்ப்பசயனம், கீழக்கரை இவ்விடங்களுக்குப்போகவேண்டும். இராமநாதபுரத்து இராஜாவின் வாசஸ்தலம் இதுவே. இவ்வூர் ராஜாவினல் கட்டப்பட்ட அரண்மனையும், சிங்காரத் தோட்டம் முதலியவைகள் பார்க்கத்தக்கவைகளாயிருக்கின்றன. இவ்வூரில், பனைநாரினல் செய்த கூடைகளும், வீடுகளுக்கு உதவக்கூடிய பனைமரங்களும் கிடைக்கின்றன. இவ்வூர் ராஜாவால் புரட்டாசிமாதத்தில் நடத்தப்படும். நவராத்திரி உத்ஸவத்திற்குத் திராளான ஜனங்கள் இங்கு வருகிறார்கள். இங்கு ஒரு ஆஸ்பத்திரியும், சப்ரிஜிஸ்தர் கச்சேரியும், டிவிஷன் கலெக்டருடைய கச்சேரியும், தாலூகா போர்டு ஆபீஸும் இன்னும்பல கச்சேரிகளும் உண்டு. இங்கு புதன்கிழமைகள் தோறும் சந்தை கூடுகிறது.

தர்ப்பசயனம்:— இவ்வூர் இராமநாதபுரத்திற்குத் தெற்கே கடற்கரையோரத்திலுள்ளது. இது ஒரு விஷ்ணு ஸ்தலம். இவ்வூருக்கு மறுபெயர் திருப்புல்லணை என்று

பெயர். இவ்விடத்தில் ஸ்ரீராமர், சமுத்திரத்தில் அணைகட்ட சமுத்திர இராஜனை வரவழைக்க தர்ப்பைப்புல்லின்மேல் சயனித்து நிஷ்டையில் இருந்ததால் இவ்விடத்திற்கு இப் பெயருண்டாயிற்று. தனுஷ்கோடிக்குப் போய்வரும் யாத்திரி கர்கள் இங்குவந்து கடவுளைத்தரிசித்துப் போகிறார்கள். இதுவும் ஒரு யாத்திரை ஸ்தலம்.

தேவிபட்டணம்:—இது ஒருயாத்திரைஸ்தலம். இவ்வூர் இராமநாத்புரத்திற்கு வடக்கே 9மைல் தூரத்திலுள்ளது. இவ் வூருக்கு மறுபெயர் நவபாஷாணம் என்றுபெயர். இராமேஸ் வரம் போகும் யாத்திரிகர்கள் இங்குவந்து இங்குள்ள 9 கற் சிலைகளை (நவக்கிரகங்களை) பூஜித்து பிரதக்ஷணம் செய்து விட்டுப்போகிறார்கள். இங்குள்ளவர்களில் சிலர் படகுகளில் ஏறி மீன்களைப்பிடித்து விற்பனைசெய்கிறார்கள். இராமநாத புரத்து இராஜாவினால் கட்டப்பட்ட சத்திரம் ஒன்றுண்டு.

கீழக்கரை:—இவ்வூர் குண்டாற்றின் கரையிலுள்ளது. இது ஒரு துறைமுகப்பட்டணம். இங்கு மகம்மதியர்கள் அதிகம். இங்கு கடலின் வலம்புரிச்சங்குகள், முத்துகள் முதலிய கடலில் உண்டாகும் பொருள்கள் கிடைக்கின்றன.

மண்டபம்:—இது ஒரு ரயில்வேஸ்டேஷன். இவ்வூர் கடற்கரையோரத்திலிருப்பதால், கோடைகாலத்தில் குளிர்ச்சி யாகவேயிருக்கிறது. இலங்கைத் தீவிற்குப்போகும் ஜனங்கள் இவ்விடத்தில் ஒருவாரம்வரையில் தங்கியிருந்து போகிறார் கள். இவ்விடத்தில் கடல் மீன்கள் அதிகமாய்க்கிடைக் கின்றன.

உத்தரகோசமங்கை:—இது ஒரு சிறிய துறைமுகம். இது ஒரு சிவஸ்தலம்.

பாம்பன்:—இது ஒரு ரயில்வேஸ்டேஷன். இங்கு, கடற்கரையோரத்தில் உயரமான விளக்குக்கூண்டு (Light House) ஒன்று இருக்கிறது. இவ்விடத்தில் உலர்ந்த மீன்கள் ஏற்றுமதியாகின்றன. இங்கு கள் இறக்கும் தொழில் நடக்கிறது.

தங்கச்சிமடம்:—இது ஒரு யாத்திரைஸ்தலம். இங்கு ஒரு விஷ்ணுகோவில் இருக்கிறது. இது ஒரு ரயில்வேஸ்டேஷன். பாம்பனுக்குக் கிழக்கே 2மைல் தூரத்திலுள்ளது.

இராமேசுவரம்:—இது ஒரு தீவு. நாம்வசிக்கும் இந்தியா தேசத்திலுள்ளசிறந்தயாத்திரை ஸ்தலங்களில் இதுவும்ஒன்று. இவ்வூரிலுள்ள கோவிலில் இருக்கும் சுவாமிக்கு இராமநாதர் என்று பெயர். இங்கு, ஆடி, தை மாதஅமாவாசை தினங்களிலும், மாளய அமாவாசை தினத்திலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள்வந்து கடலில்ஸ்நானம் செய்துவிட்டுப் போகிறார்கள். இங்குள்ள கோவிலுக்குள், லெக்ஷிமி தீர்த்தம் சரஸ்வதி தீர்த்தம், பஞ்சபாண்டவர்கள் தீர்த்தம், அநுமார் தீர்த்தம், சர்க்கரை தீர்த்தம், கருட தீர்த்தம், கோடி தீர்த்தம், முதலிய தீர்த்தங்களுள்ள கிணறுகளிருக்கின்றன. இதைத்தவிர, கோவிலைச் சுற்றிப் பல தீர்த்தக்கிணறுகளுமிருக்கின்றன. இங்கு சமுத்திரத்தில் அணைபோல் கட்டப்பட்ட பாதை ஒன்று இருக்கிறது. அதற்குச் சேதுஅணை என்று பெயர். இந்த அணை இராவணனை ஜெயிக்க இலங்கைக்குப் போவதற்காக ஸ்ரீராமரால் போடப்பட்டதென்று சொல்லுகிறார்கள். இராமநாதபுரத்து இராஜாவினால் கட்டப்பட்டசத்திரம் ஒன்று



இராமேஸ்வரம் கோவில்

இருக்கிறது. யாத்திரிகர்கள் வந்து தங்குவதற்கு வேண்டிய மடங்களும் உண்டு. இங்கு முருங்கை மரங்கள் விசேஷம். இவ்வூரில் இங்கிலீஷ் கற்றுக் கொடுக்கும் பாடசாலை இருக்கிறது.

கோதண்டராமன் கோவில்:—இது ஒரு சிறு கிராமம். இவ்வூர் இராமேசுவரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் மத்தியிலுள்ள ஒரு ரயில்வேஸ்டேஷன். இது ஒரு விஷ்ணுஸ்தலம். இங்கும் யாத்திரிகர்கள் வந்து போகிறார்கள்.

தனுஷ்கோடி:—இவ்வூர் தென்இந்திய இருப்புப்பாதையின் தென்கோடியிலுள்ள ஒரு ரயில்வேஸ்டேஷன். இது இராமேசுவரத்திற்குக் கிழக்கே 10மைல் தூரத்திலுள்ளது. இங்குள்ள இரண்டு கடல்களும் சேருமிடத்திற்குச் சேதுக்கரை என்று சொல்லுகிறார்கள். அவ்விடத்தில் தான் யாத்திரிகர்கள் ஸ்நானம் செய்கிறார்கள். இலங்கைக்குப் போகும் ஜனங்கள் இவ்விடத்திலிருந்து கப்பலேறிப் போகிறார்கள். இவ்வூரில் நாட்டுக்கோட்டைச்செட்டியாரால் சத்திரம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இங்கு சிப்பிகள் கிடைக்கின்றன. படத்தைப்பார்த்து இங்குள்ள கடல்களைச் சொல்லுங்கள்.

VII. பரமக்குடி தாலூக்கா

எல்லைகள்;—படத்தைப்பார்த்து இத்தாலூக்காவின் எல்லைகளைச் சொல்லுக?

பரமக்குடி:—இது ஒரு ரயில்வேஸ்டேஷன். வைகையாறு இவ்வூர்வழியாகப் போகிறது. இங்கு சௌராஷ்டிரர் என்ற ஜாதியார் அதிகம். இவ்வூர் நெசவுத்தொழிலுக்குப் பெயர்

பெற்றது. இங்கு ராஜாவினுடைய சேக்கேண்டரி ஸ்கூல் ஒன்று இருக்கிறது. இங்கு வியாழக்கிழமைகள் தோறும் சந்தை கூடுகிறது. இவ்வூரில் சப்ரிஜிஸ்தர் கச்சேரியும், ஜில்லா முனிசீபுக் கச்சேரியும் இருக்கின்றன.

பாண்டிக்கண்மாய்:—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இவ்வூர் பரமக்குடிக்குக் கிழக்கே 6 மைல் தூரத்திலுள்ளது.

VIII. முதுகுளத்தூர் தாலூக்கா

எல்லைகள்:— வடக்கே பரமக்குடி தாலூக்காவும், சிவகங்கை தாலூக்காவும், தெற்கே திருநெல்வேலி ஜில்லாவும், மன்னார் வளைகுடாவும், மேற்கே அறுப்புக்கோட்டைத் தாலூக்காவும், கிழக்கே இராமநாதபுரம் தாலூக்காவும் இருக்கின்றன.

முதுகுளத்தூர்:—இது இத்தாலூக்காவின் முக்கிய பட்டணம்.

அபிராமம்:— இவ்வூரில் முகம்மதியர்கள் அதிகமாய் வசிக்கிறார்கள். முகம்மதியர்களால் கட்டப்பட்ட பள்ளிவாசல் ஒன்றுண்டு. இங்கு முஸ்லீம் சேக்கேண்டரி ஸ்கூல் ஒன்று இருக்கிறது. இவ்வூரில் நெசவுத்தொழில் நடக்கிறது.

கமுதி:—இவ்வூர் முதுகுளத்தூருக்கு வடமேற்கில் குண்டாற்றின் கரையில் இருக்கிறது. இங்கு சப்ரிஜிஸ்தர் கச்சேரியும், ஒரு போர்டு ஹைஸ்கூலும் கிரிஸ்தவ கோவில்களுமிருக்கின்றன. இவ்வூரில், வெண்கலம், பித்தளை இவைகளினால் பலவிதப்பாத்திரங்கள் செய்கிறார்கள்.

IX. அறுப்புக்கோட்டைத் தாலூக்கா

எல்லைகள்:— படத்தைப்பார்த்து இத்தாலூக்காவின் எல்லைகளைச்சொல்லுக?

அறுப்புக்கோட்டை:— இத்தாலூக்காவின் முக்கிய பட்டணம் இதுவே. இவ்வூரில் நெய்யும் வஸ்திரங்கள் வெளியூர்களுக்கு ஏற்றுமதியாகின்றன. இவ்வூரில் நாடார்கள் அதிகம். இவ்வூரில் சைவபானு க்ஷத்திரிய ஹைஸ்கூலும், தேவாங்கர்களுடைய முதல் கிரேட் எலிமெண்டரி பாடசாலை யும், மிஷின் போர்டிங் பள்ளிக்கூடமுமிருக்கின்றன.

பாளையம்பட்டி;—இது ஒரு சிறிய ஜமீன்.

திருச்சுழி;—இது ஒரு சிவஸ்தலம். இவ்வூர் அறுப்புக் கோட்டைக்கு வடகிழக்கில் 8 மைல் தூரத்திலுள்ளது. இங்கு துணைமாலையம்மன் கோவில், திரௌபதியம்மன் கோவில் விசேஷம். இவ்வூர்களைத்தவிர பாலவநத்தம், பண்டல் குடி முதலிய முக்கிய ஜமீன்களுமுண்டு.

---

27. ஜில்லா சரித்திரம்

தென் இந்தியாவில் திராவிட அரசர்களில் சேரர், சோழர், பாண்டியர், முக்கியமானவர்கள். சேரர்கள் திருவாங் கூர், கொச்சி ராஜ்யங்களும், மலையாளம் ஜில்லாவும் உள்ள பாகத்தையும், சோழர்கள், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், ஜில்லாக்களும் உள்ளபாகத்தையும், பாண்டியர்கள், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களும் உள்ளபாகத் தையும் ஆண்டுவந்தார்கள். இவர்களுக்குத் தமிழ் மூவேந்தர் என்றும் பெயர். நமது ஜில்லாவானது முன்காலத்தில் பாண்டிய நாட்டின் ஒருபாகமாயிருந்தது.

---

28. நாயக்கர்கள்

பாண்டிய நாட்டை விஸ்வநாதநாயக்கர், குமார கிருஷ்ணப்பநாயக்கர், முத்துகிருஷ்ணப்பநாயக்கர், முத்து வீரப்பநாயக்கர், திருமலைநாயக்கர், குமாரமுத்துநாயக்கர், முதலியவர்கள் ஆண்டார்கள். இவர்களில் திருமலைநாயக்கர், நமது ஜில்லாவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சிலகட்டிடங்கள் கட்டி முடித்திருக்கிறார். மைசூர் அரசனுக்கும் திருமலைநாயகருக்கும் சண்டைநடக்கப்போகும் சமயத்தில், சேதுபதியின் உதவியால் மைசூர் அரசனைத் துரத்திவிட்டதினிமித்தம், நாயக்கர், சேதுபதிக்குத்திருப்புவனம், பள்ளிமடம், திருச்சுழி என்ற இடங்களையும், திருமலை சேதுபதி என்ற பட்டத்தையும் கொடுத்தார். ஸடைகதேவருக்குச் சேதுபதி என்ற பட்டத்தைக்கொடுத்தவர் திருமலைநாயக்கரே. மறவர்களின் தலைவர்களுக்குச் சேதுபதி என்ற பட்டப்பெயருண்டு. மறவர்கள் என்ற வார்த்தைக்கு வீரத்தன்மையுடையவர்கள் என்று அர்த்தமாகும். இராமபிரானுக்கும் இராவணனுக்கும் சண்டை நடந்த பொழுது சேதுபதியின் முன்னோர்கள், இராமருக்கு உதவி செய்ததற்காக இராமர், போகும்போது உன்னை நான் மறவேன் என்று சொன்னதிலிருந்து மறவன் என்ற பெயர் வழங்குகிறதென்கிறார்கள். மங்கம்மாள் என்ற அரசியும் நமது ஜில்லாவில் பலவிடங்களில் ஜனங்களுக்குச் சௌகரியமாக, சாலைகளும், சத்திரங்களும் அமைத்திருக்கிறார்கள். இனி நாம், நமது ஜில்லாவிலிருந்த இராஜாக்களைப்பற்றி கவனிப்போம்.

சடையத்தேவர்:—முத்துகிருஷ்ணன் நாயக்கர் காலத்தில் இவர், 72 பாளையப்பட்டின் தலைவராகச் சேதுபதி என்ற பட்டத்தைப் பெற்றவர். இச்சடையத்தேவரே, இராமநாதபுரத்தில், முன்காலத்தில் கோட்டையைக் கட்டுவித்தவர்.

2-வது சடையத்தேவர்:—இவருடையதகப்பன் பெயர் கூத்தன் சேதுபதி. இவர் 13வருஷம் வரை இராமநாதபுரத்தை ஆண்டுவந்தார். இவருக்குப் பிறகு 2-வது சடையத்தேவர் பட்டத்துக்கு வந்தார். இவர் சுமார் இரண்டு வருஷம் ஆண்டார். இவருக்குக் குழந்தை இல்லை. இவருடைய சுவீகாரப்புத்திரன் இரகுநாததேவரிடம் நாட்டை ஒப்புவித்தார். இவரிடம் ஒப்புவித்ததற்காக, தம்பி என்பவர் கலகம் செய்தார். பிறகு கலகத்தை நிறுத்தி, இராமநாதபுரம் ராஜ்யத்தை, திருவாடானை, சிவகங்கை, இராமநாதபுரம் என மூன்று பாகமாகப்பிரித்து 1 தணக்கத்தேவருக்கும், 2தம்பிக்கும், 3இரகுநாதருக்கும் கொடுக்கப்பட்டன. முடிவில் இம்மூன்றும் இரகுநாதசேதுபதியின் ஆளுகைக்குட்பட்டிருந்தன.

கிழவன் சேதுபதி:—இவருக்கு முன் ஆண்ட சேதுபதிகளைக்காட்டிலும், அதிக வருஷம் ஆண்டபடியால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. 1686வருஷத்தில் முத்து வீரப்பநாயக்கருக்கு விரோதமாக, சேனாதிபதி வேங்கடகிருஷ்ணப்பனும், கிழவன்சேதுபதியும், கலகம் செய்தபொழுது, தன்னுடைய பிதாவினால் சேனாதிபதியாக அனுப்பிய இருவரையும், சேனாதிபதி குமாரப்பிள்ளை என்பவர் பிடித்து அரசனிடம் அனுப்பப் போகும் பொழுது, கிழவன் சேதுபதி குமாரப்பிள்ளையைத்

தூக்கிலேற்றினர். பிறகு, அவருடைய குடும்பத்தாரையும் கஷ்டப்படுத்தினர். பிறகு, இவர்கள் இருவரும், மதுரைமீது படை எடுத்தபொழுது, முத்துவீரப்ப நாயக்கர், இவர்களுடன் சமாதானம் செய்துகொண்டு, நாட்டை ஆண்டுவரும் பொழுது, அம்மை நோயால் மரணமடைந்தார். கிழவன் சேதுபதி காலத்தில் கிறிஸ்தவர்களுக்குப்பலவிதக் கஷ்டங்கள் ஏற்பட்டன. (உதாரணம்) 1672வருஷத்தில் மதுரை மிஷின் தலைவராக இருந்த ஜீன்ஹெக்டா டீபிரிட்டோ என்ற பாதிரியார் 1691வருஷத்தில் மறவநாட்டில் தன்மதமாகிய கிறிஸ்தவ மதத்தை எங்கும் பரவச்செய்ய ஆரம்பித்தார். திரயத்தேவருக்கு ஏற்பட்டநோயை, இப்பாதிரியார் நீக்கிவிட்டதின் பேரில், இத்திரயத்தேவரும், இவருடைய மனைவிகளில் ஒருத்தியும், இவ்விருவர்களும் இம்மதத்தில் சேர்ந்துகொண்டார்கள். இதையறிந்த சேதுபதி, பாதிரியாரைத் தூக்கிலேற்றி கொன்றுவிட்டார். மேலும், கிறிஸ்தவர்களை இம்சிக்கவும் ஆரம்பித்தார். இதையறிந்த பூச்சே என்னும் பாதிரியார் நரசப்பையரின் உதவியால் மங்கம்மாளிடம், சேதுபதியின் செய்கையைத் தெரிவிக்க, மங்கம்மாளின் வேண்டுகோளின் படி சேதுபதி கிறிஸ்தவர்களை இம்சிக்காமல் இருந்தார். கிழவன் சேதுபதியின் பெயர் துரைரேகுநாதசேபதி.

ராஜராஜேசுவர முத்துராமலிங்க சேதுபதி அவர்கள். இவருடைய தந்தையின் பெயர் பாஸ்கரசேதுபதி அவர்கள். இவர் சென்னை சட்டசபையில் ஒருமெம்பராகவும், நமது ஜில்லாபோர்டின் பிரஸிடெண்டாகவும் இருந்தார். இவர் நமது ஜில்லாவில், தர்மபாடசாலைகளும், சத்திரங்களும் ஏற்படுத்தினர். மேலும், பலவித நன்மைகளும் புரிந்து வந்தார்.

5

29. ஆங்கில அரசாட்சி

நாம் வசிக்கும் இந்தியா தேசம், நமது காருண்ய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்களின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. நமது ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட தேசங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பிரதிநிதிகளை நியமித்திருக்கிறார்கள். இப்போது நமது பிரதிநிதி டில்லியில் வசித்து வருகிறார். இந்தியா தேசத்திற்கு உட்பட்டிருக்கும் ஒவ்வொரு இராஜதானிக்கும் ஒவ்வொரு கவர்னரை நியமித்தும், இராஜதானியைப் பலஜில்லாக்களாகப்பிரித்து, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தலைவராக கலெக்டரை நியமித்தும், ஜில்லாக்களைப் பலதாலூக்காக்களாகப் பிரித்து, ஒவ்வொரு தாலூக்காவிற்கும் தாசில்தார் என்பவரை தலைவராக நியமித்தும் ஆளப்படுகிறது.

இப்போது நாம்வசிக்கும் இராமநாதபுரம் ஜில்லாவை ஒன்பது தாலூக்காக்களாகப்பிரித்து கலக்டரால் நமது ஜில்லாவை ஆளப்படுகிறது. கலெக்டருக்கு உதவியாக, சப் கலெக்டர், டிப்டிகலெக்டர், தாசில்தார், ரேவினியூ இன்ஸ்பெக்டர், கிராமமுனிசீப், கர்ணம், முதலியவர்களை நியமித்திருக்கிறார்கள்.

தாலூக்காக்களை டிவிஷன்களாகப் பிரித்து ஒவ்வொரு டிவிஷனுக்கும் சப்கலெக்டர்கள் அல்லது டிப்டி கலெக்டர்களை நியமித்திருக்கிறார்கள். இஜ்ஜில்லாவை மூன்று டிவிஷன்களாகப் பிரித்திருக்கிறார்கள். அதாவது 1. இராமநாதபுரம் டிவிஷன் 2. தேவகோட்டை டிவிஷன் 3. சிவகாசி டிவிஷன். இராமநாதபுரம் டிவிஷனைச்சேர்ந்தவை:— இராமநாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை

தாலூக்காக்களும்; தேவகோட்டை டிவிஷனைச்சேர்ந்தவை:—சிவகங்கை, திருப்பத்தூர், திருவாடானைத் தாலூக்காக்களும், சிவகாசி டிவிஷனைச்சேர்ந்தவை;—சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்காக்களுமாக ஏற்படுத்தி ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒவ்வொரு டிவிஷன் ஆபீஸரை நியமித்திருக்கிறார்கள். நம்முடைய ஜில்லாவிலுள்ள ஜமீன்தார்கள், ராஜாங்கத்தாருக்கு வருஷங்கள்தோறும் கப்பம் கட்டிக்கொண்டு வருகிறார்கள். ஜமீன்தார்கள், அவரவர்களுக்கு ஏற்பட்ட பாகங்களில் மட்டும் குடிகளிடமிருந்து நிலவரியைவசூல் செய்ய பாத்தியஸ்தர்களாவார்கள். இதைத் தவிர, மற்றவரிகளை வசூலிப்பதற்கும், சிவில், கிரிமினல் முதலிய நியாயவிசாரணை செய்வதற்கும், நமது ராஜாங்கத்தாரே பாத்தியஸ்தர்களாயிருந்து வருகிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவின் நிர்வாகத்தை பல டிபார்ட்மெண்டுகளாகப்பிரித்து ஆளப்பட்டு வருகிறது. அதாவது 1. படிப்பிலாகா 2. காட்டிலாகா 3. தபால்தந்தி இலாகா, 4. ரெவினியூ இலாகா, 5. சுகாதார இலாகா. 6. நியாயபரிபாலன இலாகா, 7. பொதுஜனமராமத்து இலாகா, 8. போலீஸ் இலாகா.

படிப்பிலாகா:—பெரிய நகரங்களிலும் கிராமாந்தரங்களிலும் கீழ்தரப்படிப்பு, உயர்தரப்படிப்பு என இருவகையான பள்ளிக்கூடங்களிருக்கின்றன. இவைகளுக்கு, நமது காருண்ய கவர்ன்மெண்டார் அதிகமான பொருள் உதவி செய்து வருகிறார்கள். இதன் அபிவிர்த்தியின் பொருட்டு டிப்டி இன்ஸ்பெக்டர், டிஸ்ட்ரிக்ட் எடிகேஷனல் ஆபீஸர், டைரக்டர் முதலியவர்களையும் நியமித்து மேற்படி பள்ளிக்

கூடங்களுக்குச்சென்று உபாத்தியாயர்களுக்கு மாதிரிபாடம் நடத்திக்காட்டியும், மாணவர்களைப் பரீக்ஷித்தும் வருகிறார்கள்.

காட்டிலாகா:—நமது தேசத்திலுள்ள காடுகள் அழிந்து போகாதபடி பாதுகாத்துக் கொள்வதற்காக இந்தஇலாகாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் பாரஸ்ட் ஆபீஸர் முதலிய வர்களை நியமித்திருக்கிறார்கள்.

தபால் தந்தி இலாகா:— அயலூர்களிலுள்ளவர்களுக்கு நாம் அனுப்பும் தந்தி, கடிதங்கள், மணியார்டர், பார்ஸல், முதலியவைகளைக் கொடுக்கவும், அங்கிருந்து அனுப்ப வேண்டியவைகளை அனுப்பவும், நம்மிடம் ஏதாவது ரூபாய்களிருந்து அதைப்பாதுகாக்கச் சக்தியில்லாதிருந்தால் சேவிங் பாங்கில் சொற்ப வட்டிக்குக் கொடுத்து வைக்கவும், வேண்டும் போது வாங்கிக்கொள்ளவுமே இந்த இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ரெவினியூ இலாகா:—நமது தேசத்திலுள்ள, நன்செய், புன்செய் நிலங்களுக்கு தீர்வை வசூல்செய்தல், கண்மாய், ஆறு, குளம் இவைகள் வெட்டுதல், கெட்டுப் போகாமல் பார்த்துக்கொள்ளல், முதலியவைகளுக்காக இந்த இலாகாவை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதில் ரெவினியூ இன்ஸ்பெக்டர் முதலியவர்களை நியமித்திருக்கிறார்கள்.

சுகாதார இலாகா:—ஓர் ஊரிலுள்ள ஏழைகள் நோய் வந்து கஷ்டப்படும் காலத்தில் அவர்களுடைய வியாதியைப் போக்கவும், தொத்துவியாதி பரவும் காலத்தில், அவைகளைத்

தடுக்கவும், இந்த இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் அஸிஸ்டெண்ட் சர்ஜன், டிஸ்டிரிக்ட் மெடிக்கல் ஆபீஸர் முதலிய உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

நியாயபரிபாலன இலாகா:— சிவில் சம்பந்தப்பட்ட சொத்துக்களில் ஏற்படும் வழக்குகள், நிலவழக்குகள், பண வழக்குகள் முதலியவைகளை கிரிமினல் சம்பந்தமாய் ஏற்படும் குற்றங்களையும் விசாரித்து நியாயம் வழங்கும்படிக்கு இந்த இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

போதுஜனமராமத்து இலாகா:— பொது ஜனங்களுக்கு அவசியமான இடங்களில் சத்திரம், கிணறுகள், குளங்கள், பாலங்கள், ரோட்டுகள், அவசியமான சர்க்கார்கட்டிடங்கள் கட்டவும், மராமத்துப்பார்த்துக் கொள்ளவும் இந்த இலாகாவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதில் ஓவர்சியர், இஞ்சினியர்முதலிய உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

போலீஸ் இலாகா:—ஊரில் களவு, கொலை, திருட்டு முதலியனவும், ராஜதுரோகமான காரியங்கள் நடைபெறா திருக்கவும், நாட்டில் குழப்பம் உண்டாகி அதன்மூலம் தந்தி தபால், தடைபடாதிருக்கவும் பொதுவாக ஊரைப்பாதுகாக்கவும் இந்த இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் இன்ஸ்பெக்டர் ஜெனரல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் முதலிய உத்தியோகஸ்தர்களைநியமித்திருக்கிறார்கள்.

இதுதவிர நமதுகாருண்யம் நிறைந்த துரைத்தனத்தார் இன்னும்பல நன்மைகளைச் செய்து வருகின்றார்கள் ஆரம்பப் படிப்பை விர்த்தி செய்தல், தர்ம ஆஸ்பத்திரிகள் வைத்தல், பழைய ரஸ்தாக்களை ரிப்பேர்செய்தல், புதிதாக ரஸ்தாக்கள்

ஏற்படுத்தல், தர்மசத்திரங்கள் கட்டுதல் முதலியவைகளைக் கவனிக்க ஜில்லாவின் சுய ஆட்சி சபைக்கு ஜில்லாபோர்டு என்று பெயர். நாம்வசிக்கும் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைமை அதிகாரிக்குப் பிரஸிடேண்ட் என்று பெயர். இஜ்ஜில்லா போர்டு பிரஸிடெண்டாய் இருப்பவர் கனம் திருவாளர் W. P. A. சௌந்திரபாண்டியன் அவர்கள். ஒவ்வொரு தாலூக்காவிற்கும், ஒரு தாலூக்கா போர்டும் உண்டு. ஆனால் சிறிய தாலூக்காவாயிருந்தால், அவ்விதமாயுள்ள இரண்டு தாலூக்காகளுக்கு ஒரு தாலூக்காபோர்டு உண்டு. மேற்படி போர்டின் பிரஸிடெண்ட் தலைமை அதிகாரியாவார். பெரிய பட்டணங்களில் முனிஸிபல் சபை உண்டு. அச்சபையின் அங்கத்தினர்களுக்கு முனிஸிபல் கௌன்ஸிலர்கள் என்று பெயர். இச்சபையின் தலைவருக்கு சேர்மன் என்று பெயர். இவரை மேற்குறித்த கௌன்ஸிலர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இக்கௌன்ஸிலர்களைப் பட்டணத்திலுள்ள, வரி செலுத்துவோர்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். இவ்விதமாகத் துரைத்தனத்தார் சில அரசியல் சீர்திருத்தம் கொடுத்தும், அன்பு நீதியுடன் அரசாண்டு வரும் நமது ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியும், அன்னவருடைய மனைவி மேரி மகாராணியும், அவர்கள் சுற்றத்தார்களும் நீடூழிவாழ கடவுள் திருவருள் புரிவாராக.

121285

நமது இந்திய சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி வாழ்த்துப்பாடல்

(தையலே கழுத்திலிந்த தாலியேதடி என்ற மெட்டு)

அகில இந்திய சக்கரவர்த்தி ஐந்தாம்ஜார்ஜ் வாழ்கவே
இகழும் அன்னை ராணிமேரி க்ஷேமமாக வாழ்கவே
திண்ணமாய், மண்ணிலமும், மாரி பெய்யவே
திருவருளுடன், பிரஜைகள்புகழ், பெருகி உய்யவே

மைந்தர் பந்துமித்திரர் மகிமையாக வாழ்கவே
இந்திர நாடனைய நம்மிந்தியா என்றும் வாழ்கவே
எல்லையில், கல்வியின், செல்வம், ஓங்கவே
இதமுடனிதி, உதவிடும்நம, தாசர் வாழ்கவே

திட்டமாக கப்பமீயும் சிற்றரசர் வாழ்கவே
எட்டாம் எட்வர்ட் இளவரசர்என்றும் ஓங்கி வாழ்கவே
இங்கிலீஷ், என்றநா, மம்துலங்கவே
ஏற்றமாய்நம்மை, ஆட்சிசெய்திடும், ஜார்ஜ் வாழ்கவே

முற்றிற்று

சிவிக்ஸ்

அல்லது

துரைத்தன விளக்கப்பாடங்கள்

(முதற்பாகம்)

R. சவரிமுத்து அவர்கள் எழுதியது.

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களாவன:— நகரபரிபாலனம், முனிஸிபாலிட்டி, தபால் இலாகா, பார்ஸல், பாக்கெட் போஸ்டு, வி. பி. போஸ்டு, மணியார்டர் தபால் இலாகா அதிகாரிகள், போலீஸ் இலாகா, (ஊர் காவல்) ரிசர்வ் போலீஸ், போலீஸ் உத்தியோகஸ்தர்கள், கிரிமினல் நியாய விசாரணை இலாகா, சிவில் வழக்கு, ஹைகோர்ட்டு, இங்கிலாந்தில் மந்திராலோசனை சபை, படிப்பிலாகா, படிப்பிலாகா அதிகாரிகள், பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார் உதவி, கிராண்டு ஜில்லா கல்விச்சங்கம்.

விலை அணா 4

துரைத்தன விளக்கப்பாடங்கள்

(இரண்டாம் பாகம்)

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களாவன:— கிராம பரிபாலனம், கிராம முன்சீப்கோர்ட்டு, ஜில்லா பரிபாலனம், மாகாண பரிபாலனம், தேச பரிபாலனம், வைத்தியம், சுகாதார இலாகா, மராமத்து இலாகா பரிபாலனம், சர்க்காருக்கு நாம் செய்யும் உதவிகள், அரசிறை இனும், நிலங்களும் வரியும், சர்க்காருக்கு நாம் செய்யும் இதர உதவிகள் இதர வரும்படிகள். விலை அணா 6

3, 4, 5-வது வகுப்புகளுக்கு உபபாடமாக வைக்கத் தகுந்த புத்தகங்கள்.

வாலி சரிதை	0—2—6
பாலர் நன்மதிக் கதைகள்	0—4—0
குமாரக்கடவுள்	0—6—0
நற்பெண்டீர்	0—4—0
நற்புதல்வர்கள்	0—4—0
மகாராணி மங்கம்மாள்	0—3—0
கர்ணன் கதை	0—4—0

நேச்சர்ஸ்டடி

என்ற

இயற்கைப் பொருட் பாடம்.

R. சவரிமுத்து அவர்கள் எழுதியது.

இப்புத்தகத்தில் கடவுளின் இயற்கையால் அமைக்கப்பட்ட பிராணிகளின் பாடங்களும் தாவர பாடங்களும் நீர் வாழ்வன நிலவாழ்வன பாடங்களும் தொகுத்து எழுதப் பெற்றிருப்பது. விலை அணா 5

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

நீதிப்பாடங்கள்.

உலகநீதி மூலமும் உரையும்	0—0—9
ஆத்திச்சூடி மூலமும் உரையும்	0—0—9
கொன்றைவேந்தன் மூலமும்உரையும்	0—0—9
வெற்றிவேற்கை மூலமும்உரையும்	0—0—9
வாக்குண்டாம் மூலமும்உரையும்	0—0—9